

வந்தனம்! நீங்கள் லைப்பாய் தேகாப்பியாசம் செய்தீர்களா?

உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் — அது வாழ்க்கையின் மிக அரிய பொக்கிஷம். உறுதியும், நிட்சண்யமும் கொண்ட புத்தி ஏற்பட பூரண ஆரோக்கியம் அவசியம் என்பதை மறக்காதீர்கள். திட்டப்படி தவறாமல் தேகப்பயிற்சி செய்வது, சாதாரண சத்துள்ள உணவை உட்கொள்வது, சரீர சுத்தத்தை பாதுகாப்பது — இவையே உடல் வலிமையை வளர்த்துவருதற்கு முக்கியமாகச் செய்ய வேண்டியவைகள். லைப்பாய் உங்களுக்கு சரீர சுத்தத்தைத் தருவதோடு, அதில் கலந்துள்ள சுகாதாரப் பொருளின் சக்தியால் உங்கள் உடலை நோய்களிலிருந்து காப்பாற்றவும் உதவுகிறது.





லைப்பாய் சோப்புடன்
துவக்கும் நாளே நன்னாள்

L. 94-23 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED


4As
Policy
WORLD WIDE POLICY NO. 558
ஓரே ஒரு பிரீமியம்
உங்கள் வருங்காலத்திய எழுதும் நிலைமையின் முன்னேற்றத்தை இன்ஷ்யூர் செய்கிறது.
... ஏனென்றால் மெண்ட்மோர் ஆடோப்ளோ பேனா இந்தியாவின் சீதோஷ்ண நிலையைத் தாங்கக்கூடிய பொருள்களால் விசேஷமாக செய்யப்பட்டது. ட்ராப்-பில்லிங், லீவர், லீடட்-பில்லிங் முதலிய மாடல்களில் கிடைக்கிறது. அதனுடைய கெட்டியான நிப் 14 காரட் தங்கத்தால் செய்யப்பட்டது. ஆஸ்மி இருடியத்தில் தோய்க்கப்பட்ட முனையோடுகூடியது. ஒவ்வொரு பேனா குழலின்மேலும் நிப் பின்மேலும் மெண்ட்மோர் என்ற பெயர் செதுக்கப்பட்டிருக்கிறதா என்று கவனித்துப் பாருங்கள். உங்கள் ஆயுட்கால சேவையின் அஷ்யூரன்ஸ்.
ரூ. 15!
இங்கிலாந்தில் செய்யப்பட்டது.
MENTMORE
Auto-Flow
மெண்ட்மோர் ஆடோப்ளோ.
FOUNTAIN PEN
வர்த்தக விசாரணைகளுக்கு உரிமைபெற்ற முழு விநியோகஸ்தர்:
முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட் 15, கச்சூராம செட்டித் தெரு, மதராஸ்





மனோஹரமான ரோஜாக்களின் மனதை மயக்கும் பரிமளத்தையும், அவைகளின் நேர்த்தியான பட்டுப் போன்ற மென்மையையும் வினோலியா ஒயிட்ரோஸ் உங்களை அனுபவிக்கச்செய்யும். உங்கள் இஷ்டத்திற்குரிய இச்சோப் மேனிக்கு மிக நன்மையளிக்கிறது; உங்கள் சௌந்தரியத்திற்கு அத்தியாவசியமானது.

வினோலியா

ஒயிட் ரோஸ் சோப்

VWR 25-23 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND.


உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.
உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிககாலம் உழைக்கும்.
மைசூர் சில்க்
மைசூர் கவர்மெண்ட் தயாரிப்பு
கவர்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்


1
குழந்தை அழுகிறது
(ஒரு காரணமுமின்றி)
2
அதற்கு
கிரைப் ஸிரப்
கொடுங்கள் (அருசி யில்லாதது)
3
குழந்தை சிரிக்கிறது
ஒரு ITL தயாரிப்பு
தயாரிப்பவர்கள்:
மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரடேரி லிட்., மல்லேஸ்வரம், பெங்களூர்
விற்பனை ஏஜண்டுகள்:
மெஸ்ஸர்ஸ். பெஸ்ட் அண்டு கம்பெனி, லிமிடெட், த. பெ. நெ. 63, மதராஸ்


குடிசையில் ராஜாஜி
திருச்செங்கோட்டுக்கு
அருகில் காந்தி ஆசிரமத்
தில் பல ஆண்டு வசித்து
கிராம சேவை புரிந்தார்.
சந்திரா




கவர்னர் ஜெனரல் ராஜாஜி

இந்தியாவின் ஆக்டிங் கவர்னர் ஜெனரல் பதவி வகித்த போது, அரசாங்க அரண்மனையில் ராஜாஜி அளித்த விருந்துக்கு எல்லா மந்திரிகளும் வந்திருந்தார்கள்.

மேலே அயல் நாட்டு மந்திரி சர்தார் வல்லபாயும் அவருடைய குமாரியும் ராஜாஜியின் இருபுறத்திலும் நிற்கிறார்கள். கீழே பண்டித ஜவாஹர்லால் நேருவும் அவருடைய குமாரியும் ராஜாஜியுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.





கவர்னர் ராஜாஜி

வேறு யாரும் ஒப்புக் கொள்ளத் தயங்கிய மேற்கு வங்காளக் கவர்னர் பதவியை ஒப்புக் கொண்டார். படத்தில் கவர்னர் ராஜாஜியையும் அவருடைய நான்கு மெய்காப்பாளரையும் காரியதரிசியையும் காணலாம்.



கல்கி பொருளடக்கம்

மலர் 7 இதழ் 20 | டிசம்பர் 14 | சர்வஜித்து ஐ கார்த்திகை 29

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

இன்று முதல்

திருச்சி	— ராமகிருஷ்ணா	பாண்டிச்சேரி	— ராமகிருஷ்ணா
கோவை	— எடிஸன்ஸ்	காரைக்குடி	— நடராஜா
சேலம்	— பிரபாத்	தூத்துக்குடி	— பாலகிருஷ்ணா



கீழ்க்கண்ட இடங்களில்

ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்

சென்டிரல் சினிமா — விருதுநகர்   ஸிடி சினிமா — மதுரை






பிரதம மந்திரி ராஜாஜி

இரண்டு வருஷம் ராஜாஜி பிரதம மந்திரி பதவி வகித்த போது. இந்தியாவிலேயே சென்னை நிர்வாகம் தலை சிறந்தது என்ற புகழ் ஏற்பட்டது.

1. யுத்தம் இந்தியாவுக்கு வந்தால் பொதுமக்களைப் பாதுகாப்பதற்குரிய முன்னேற்பாடுகளில் கவனம் செலுத்தினார். விஷப் புகை முகமூடியைத் தாமே அணிந்து பரிசோதனை செய்கிறார்.

2. பின்னால்வரப்போகும் பிரதம மந்திரி செட்டியாருக்கு முன்னாலேயே விருந்து கொடுக்கிறார்.

3. பின்னால் வரப் போகும் சட்ட சபைத் தலைவருடன் ராஜாஜி பொதுக் கூட்டத்துக்குச் செல்கிறார்.



கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 20

என்ன சேதி?

வேண்டிக் கொள்கிறோம்

சென்னை மாகாணக் கனம் பிரதம மந்திரி அவர்களையும் மற்ற மந்திரிகளையும் வேண்டிக் கொள்கிறோம். கதையிலே வரும் மாமியாரைப் போலவாவது என். ஜி. ஓ-க்கள் விஷயத்தில் நடந்து கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம். கதையிலே வரும் மாமியார் வீதியிலே போன பிச்சைக்காரனை வீட்டுக்கு மறுபடி கூட்டிக்கொண்டு வந்து, "இந்த வீட்டுக்கு நான்தான் எஜமானி; பிச்சை இல்லை போ!" என்றாளாம். அம்மாதிரியாக என். ஜி. ஓ. சங்கத் தலைவர்களைக் கூப்பிட்டு விட்டு, "சம்பளம் உயர்த்த முடியாது; பஞ்சப் படியும் உயர்த்த முடியாது!" என்று வேணுமானால் கண்டிப்பாகச் சொல்லுங்கள். ஆனால், 'முகத்திலேயே விழிக்க முடியாது; இண்டர்வியூ கொடுக்க முடியாது!" என்று சொல்லாதீர்கள். பழைய பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் 'பிரஸ்டிஜ்' என்னும் மாய கௌரவத்தை முன்னிட்டுப் பல அசட்டுக் காரியங்களைச் செய்தது. அம்மாதிரி பொதுஜன மந்திரிகளும் செய்யலாமா? பார்க்கப் போனால், என். ஜி. ஓ-க்களும் நமது தேசத்தாரின் மக்கள்தான்; நமது உடன் பிறந்த சகோதரர்கள்தான்; பொது ஜனங்களிலே ஒரு பகுதியார்தான். அவர்களுடைய பொருளாதாரக் கஷ்டங்களை இல்லை என்று சொல்ல முடியாது. பத்து வருஷத்துக்கு முன்பு அவர்கள் சம்பளம் வாங்கியதையும் இப்போது (பஞ்சப்படியும் 'இன்கிரிமெண்ட்'டும் உள்பட) வாங்கும் சம்பளத்தையும் ஒப்பிட்டால் முந்தைக்கு இப்போதைய சம்பளத்தின் பெறுமானம் குறைவாகவேயிருக்கும். எனவே, என். ஜி. ஓ-க்களின் முறையீடு அநியாயம் என்று சொல்ல முடியாது. ஆனாலும் "இன்னும் கொஞ்ச காலம் நீங்கள் கஷ்டப்பட வேண்டியதுதான்; தேசத்திலே எல்லாருந்தான் கஷ்டப்படுகிறார்கள்!" என்று நம்முடைய பொதுஜன மந்திரிகள் சொல்லி அனுப்பட்டும். ஆனால் "பார்க்கவே முடியாது; கேட்கவே முடியாது: 'இண்டர்வியூ' கிடையாது" என்று பழைய அதிகார வர்க்க பாணியிலே சொல்ல வேண்டாம். அது காரணமாக நாட்டில் ஏற்கெனவே உள்ள குழப்பத்தை இன்னும் அதிகமாக்க வேண்டாம். நமது பொதுஜன மந்திரிகளை ரொம்ப ரொம்ப வேண்டிக் கொள்கிறோம்.

ஓரளவு திருப்தி

'மாப்பிள்ளை' என்று ஒரு துரும்பைக் கிள்ளிப் போட்டாலும், அது சிறிது நேரமாவது முறுக்கிக் கொள்ளும் என்று வேடிக்கையாகச் சொல்லுவதுண்டு. மாப்பிள்ளை என்றதும் ஜடப்பொருளான துரும்புக்குக்கூட 'மிகு' ஏற்பட்டு விடுகிறது! அன்னிய அரசாங்கத்துக்குத் தாஸானுதாஸர்களாக இருந்துவந்த இந்திய மன்னர்களின் நிலைமையும் இன்று அதுபோலவே இருக்கிறது. பிரிட்டிஷ் சர்க்கார் கிழித்த கோட்டைத் தாண்டும் வல்லமையோ துணிச்சலோ கொஞ்சமும் இல்லாத மகா ராஜாதி ராஜாக்கள், சொந்த சர்க்காரிடம்—சுதந்திர சர்க்காரிடம் வீரம் பேசுவது வேடிக்கைதானே? எனினும், அவர்கள் வீரம் பேசினாலும், தகராறு செய்தாலும், துள்ளிக் குதித்தாலும் அவையெல்லாம் சிறிது காலத்துக்குத்தான். ஏனெனில், இறுதியில் அவர்கள் எல்லோரும் வழிக்கு வந்து விடுகிறார்கள்; வந்துதான் தீரவேண்டும்.

தமிழ் நாட்டில் தனித் தமிழ் அரசாக விளங்கும் புதுக்கோட்டை மகாராஜா,


'பிகு'ச் செய்து கொள்ளாமலும், அடிதடி, அடக்குமுறை போன்ற அதிருப்திகரமான காரியங்களுக்கு இடம் கொடுக்காமலும் சமஸ்தான காங்கிரஸ் தலைவர்களுடன் சமரசம் செய்து கொண்டதற்காக மன்னரை மிகவும் பாராட்டுகிறோம். இந்திய சர்க்காருடைய யோசனைக் கிணங்க மகாராஜா புதிய திவான் ஒருவரை நியமிக்க வேண்டும். புதிய திவான் தாற்காலிகமாகச் சமஸ்தான நிர்வாகத்தை நடத்துவதுடன், ஏற்கெனவே மன்னர் அறிவித்துள்ளபடி புதுக்கோட்டை அரசியல் நிர்ணய சபையை அமைக்க வேண்டும். மேற்படி சபை ஏற்பட்டதும் சிறிதும் காலதாமதமின்றி இடைக்கால சர்க்காரும் அமைக்கப்படும். இறுதியில், அரசியல் நிர்ணய சபையின் சிபாரிசுகளை ஆதாரமாகக் கொண்டே நிரந்தரமான அரசியல் அமைப்பு ஏற்படும். இவைதான் ஒப்பந்தத்தின் ஷரத்துகளாகும். சரித்திரப் புகழ்பெற்ற புதுக்கோட்டையின் பெருமை, மேற்கூறிய விதம் ஜனநாயக ஆட்சி முறையை மன்னர் அங்கீகரித்ததன் காரணமாக இன்னும் அதிகமாகி யிருக்கிறது. புதுக்கோட்டை மன்னருக்கும் பிரஜைகளுக்கும் புதுக்கோட்டை சமஸ்தான காங்கிரஸுக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலில் நிறைவேறுமாக!

"எங்களுடைய புண்ணிய ஸ்தலம் இந்தியாவில் இருக்கிறது. உலகத்துக்கே சத்திய மார்க்கத்தைப் போதித்த சாக்கிய முனிவரே எங்கள் தெய்வம். அந்த மாமுனிவர் போதித்த அன்பே இந்தியாவையும் பர்மாவையும் இணைக்கும் கட்டுச் சங்கிலியாகும்......."

சென்ற வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த பர்மா பிரதம மந்திரி தாகின் நு மேற்கூறிய விதம் இந்திய ஜனங்களுக்கு ஒரு செய்தி விடுத்திருக்கிறார். தாமும், இதர பர்மியப் பிரதிநிதிகளும் மகாத்மா காந்தியைத் தரிசித்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றதாகப் பர்மா பிரதம மந்திரி கூறுகிறார். இந்தியாவிடம் அவ்வளவு தூரம் பக்தியும் மதிப்பும் கொண்டுள்ள தாகின் நு, பர்மாவிலுள்ள இந்தியர்களுக்கு உபத்திரவம் ஏற்படாமல் உதவி புரிவாரா என்பது இனிமேல்தான் தெரியவேண்டும். 1937-ம் வருஷம் வரையில் பர்மா, இந்தியாவிலுள்ள மாகாணங்களில் ஒன்றாக இருந்து வந்ததால், மற்ற வெளி நாடுகளைக் காட்டிலும் பர்மாவுடன் இந்தியர்கள் பல விதங்களிலும் அதிகத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அங்கு லட்சக்கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் இருக்கின்றனர்; இந்திய வியாபாரிகளும் ஏராளமாக இருக்கின்றனர். பர்மா சர்க்காரில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் உத்தியோகம் வகிக்கிறார்கள். பர்மாவின் பொருளாதார அபிவிருத்திக்குக் காரணஸ்தர்களான இந்தியர்களுக்குச் சுதந்திர பர்மாவில் இடமில்லை என்று கூறிவிடுவது நேர்மையாகாது. இந்தியாவின் சுதந்திரத்துக்கே விரோதிகளாக இருந்த பிரிட்டிஷ் ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களைக்கூட இந்தியா கைவிடவில்லை! வேலையை விட்டுச் செல்பவர்களுக்குத் தக்க நஷ்ட ஈடு கொடுத்தது. அப்படியிருக்க, பர்மாவின் நலனுக்கு விரோதமாக ஒரு காலத்திலும் நடந்து கொள்ளாத இந்தியர்களுக்கு அங்குள்ள பிரிட்டிஷாருக்கு அளிக்கப்படும் உரிமைகள் கூட அளிக்க மறுப்பது நியாயமாகுமா? பர்மாவில் உள்ள இந்தியர்கள் விஷயத்தில் பர்மா சர்க்கார் தர்ம நியாயமாக நடந்து கொண்டால்தான், பிரதம மந்திரியின் வார்த்தைகள் செய்கையில் நிறைவேறியதாகக் கருதப்படும்.

சர்க்கரைப் பஞ்சம்


சர்க்கரை
கண்ட்ரோல்
ரத்து
மொத்த வியாபாரிகள்
சர்க்கரை கண்ட்ரோல் ரத்துச் செய்தது வியாபாரிகளுக்குக் கொண்டாட்டமாகவும் ஏழை ஜனங்களுக்குத் திண்டாட்டமாகவும் முடியுமோ வென்று பலர் கவலைப்படுகின்றனர்.
சாக்கரை
ஸ்டாக் இல்லை
பதுக்கல் வியாபாரி





வாழ்க ராஜாஜி! வாழ்க பல்லாண்டு!

இந்தச் சர்வசித்தி வருஷம் சரித்திரப் பிரசித்தி பெறப்போகும் வருஷம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எல்லா விதங்களிலும் எல்லாக் காரியங்களிலும் இந்த வருஷம் நமக்கு சித்தி அளித்து வருகிறது.

இந்தப் புண்ணிய வருஷத்திலேதான் பாரத தேசம் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுப் பூரண சுதந்திரம் அடைந்தது.

இந்தப் புனிதமான ஆண்டிலேதான் புது டில்லியில் நமது ஒப்பற்ற தேசத் தலைவர்கள் சகல அதிகாரங்களும் படைத்த மந்திரிகளாக அமர்ந்து ஆட்சி செலுத்துகிறார்கள்.

இந்தச் சர்வசித்தி வருஷத்தில் தமிழகத்தில் மகாகவி பாரதியாரின் ஞாபகார்த்த மண்டபத்தின் திறப்பு விழா சிறப்பாக நடந்தது.

இதே வருஷத்தில் நமது அரும்பெரும் தலைவரான ராஜாஜி மேற்கு வங்காளக் கவர்னர் ஆனார். கவர்னர் ஜெனரல் பதவியும் அவர் சில காலம் வகித்தார்.

இத்தகைய முக்கியமான ஆண்டிலேதான் தமிழ் மக்கள் ராஜாஜியின் பிறந்த தினத்தைக் கண்டு பிடித்து முதன் முதலாக அந்த நன்னாளைத் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

எல்லா விதங்களிலும் நமக்குச் சித்தி தரும் ஆண்டு இந்த ஆண்டு என்பதில் சந்தேகமேயில்லை.

• • •

டாக்டர் ஸையது முகம்மது என்னும் தேசிய முஸ்லிம் தலைவர் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். அவருக்கு வரவேற்பு அளிப்பதற்காகக் கோகலே மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. மற்றவர்கள் பேசிய பிறகு கூட்டத் தலைவர், டாக்டர் முகம்மது அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொண்டார். டாக்டர் எழுந்து நின்றதும் பின்வருமாறு கூறினார்: "நீங்கள் வாழும் தென்னிந்தியாவானது முற்காலத்தில் ஸ்ரீ சங்கராச்சாரியாரையும் ஸ்ரீ ராமானுஜாச்சாரியாரையும் பெற்றளித்தது; இந்த நாளில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரை அளித்திருக்கிறது. அப்படிப்பட்ட நாட்டில் பிறந்த உங்களுக்கு நான் என்ன புதிதாகச் சொல்ல முடியும்?"

ஆம்; டாக்டர் முகம்மது கூறியது முற்றும் உண்மையேயாகும்.

நமது செந்தமிழ்நாடு உலகத்திலேயே முதன் முதலாகக் கடலிலிருந்து மேலெழுந்த பூப் பிரதேசம் என்றும், இமயமலை தோன்றுவதற்கு எத்தனையோ லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகம் தோன்றியது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள்.

அப்படிப்பட்ட புராதனப் பெருமை வாய்ந்த தமிழகத்தில் ஆதி காலத்திலிருந்து அறிவிலே சிறந்த பெரியோர்களும் ஒழுக்கத்திற் சிறந்த மகான்களும் தியாகசீலர்களான உத்தமர்களும் தோன்றியிருக்கிறார்கள். நக்கீரரும் கபிலரும் திருவள்ளுவரும் திருநாவுக்கரசரும் பாலசம்பந்தரும் பன்னிரு ஆழ்வார்களும் இளங்கோவடிகளும் இராமானுஜரும் இந்தத் தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து பெருமை தந்தவர்கள்.

அத்தகைய அறிவிற் சிறந்த தியாக மூர்த்திகளின் பரம்பரையில் வாழையடி வாழையாகத் தோன்றி இன்றைய தினம் நம்மிடையே வாழ்ந்திருக்கும் மகான் ராஜாஜியாவர்.

தமக்கென வாழாப் பிறர்க் குரியாளருக்கு அவர் உதாரண புருஷர். "யாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று துணிந்து சொல்லக் கூடியவர். ஏழை பங்காளர்; சத்தியசந்தர்; அறிவுக் களஞ்சியம்; தியாகத்தின் உறைவிடம்; தீர்க்கதரிசி; தீனபந்து.

இத்தகைய ஒரு மகானைப் பெற்றெடுத்த தமிழ்த்தாய் பாக்கியம் செய்தவள்; இந்த மகான் வாழும் காலத்தில் வாழக் கொடுத்து வைத்த நாமும் பாக்கியம் செய்தவர்களாவோம்.

தேசத்துக்காவது சமூகத்துக்காவது ஏதேனும் ஒரு துறையில் தொண்டு செய்தவர்களை அந்தந்த தேசமும் சமூகமும் போற்றிப் பாராட்டுவதைக் காண்கிறோம்.

ராஜாஜி தம் வாழ் நாளில் செய்திருக்கும் தொண்டு, வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் சார்ந்து நிற்பதாகும்.

தேச விடுதலைப் போரில் அவர் முன்னணியில் நின்று சகல தியாகங்களையும் செய்திருக்கிறார். சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காகப் பாடுபட்டுச் சாதிப் பிரஷ்டம் முதலிய பல கஷ்டங்களுக்கு உள்ளாகி யிருக்கிறார். சாதி வேற்றுமைகளையும் சமூகத்தில் உள்ள மற்ற ஏற்றத் தாழ்வுகளையும் போக்குவதற்குச் சொல்லாலும் செயலாலும் பாடுபட்டிருக்கிறார். பொது ஸ்தாபனங்களில் பொறுப்பு வகிக்கும்போது வேண்டியவர், வேண்டாதவர் என்னும் வேற்றுமை உணர்ச்சி யில்லாமல் நடுக்கண்ட நியாயம் வழங்கி யிருக்கிறார். ஹிந்து சமயத்தின் புறமாசுகளைப் போக்கி உண்மைச் சமய நெறி வளர்ந்தோங்க உழைத்திருக்கிறார். தமிழ்த் தாய்க்கு அரும்பெரும் தொண்டுகள் இயற்றி யிருக்கிறார். உலக அரங்கத்தில் தமிழகத்துக்கு ஒப்பற்ற பெருமையைத் தேடித் தந்திருக்கிறார். வட இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தமிழகத்தின் பெருமை ராஜாஜியின் மூலம் பிரசித்த மடைந்திருக்கிறது.

இத்தகைய மகானுடைய பிறந்த தினத்தை இத்தனை காலமும் நாம் கொண்டாடாமற் போன தவறுக்கு ஈடு செய்யும் பொருட்டு இவ்வருஷத்தில் ஒரு வார காலம் விழாக் கொண்டாடுகிறோம். இப்படிக் கொண்டாடுவதின் மூலம் தமிழகத்தின் மேன்மையையும் தமிழர்களின் பெருமையையும் மேலும் உயர்த்திக் கொள்கிறோம்.

• • •

ஒருவர் எவ்வளவு பெரியவரானாலும், எவ்வளவு சிறந்த மகானாயிருந்தாலும் அவருடைய எல்லாக் காரியங்களையும் நாம் ஒப்புக்கொள்ள

முடியாமலிருக்கலாம். பல காரியங்களிலே அவருடன் அபிப்பிராய வேற்றுமை கொண்டிருக்கலாம்.

உலகத்தில் தற்சமயம் வாழும் இருநூறு கோடி மனிதர்களும் தனித் தனி முக அமைப்புடன் விளங்குகிறார்கள். முகத்தின் அமைப்பைப் போலவேதான் மனத்தின் அமைப்பும். எல்லா விஷயங்களிலும் ஒரு வரைப் போலவே இன்னொருவர் சிந்திப்பதும் அபிப்பிராயம் கொள்வதும் இவ்வுலகில் அநேகமாக முடியாத காரியமாகும்.

எனவே, ராஜாஜி அவர்களின் காரியங்களைப் பற்றியும் பலவிதங் களில் பலருக்கு அபிப்பிராய பேதங்கள் இருந்திருக்கலாம்; இப் போதும் இருந்து வரலாம்.

ராஜாஜி பிறந்த தினத்தைக் கொண்டாடும் இந்தப் புனிதமான வாரத்தில் அந்த அபிப்பிராய பேதங்களை யெல்லாம் யாரும் ஞாபகப் படுத்த வேண்டியதில்லை; வற்புறுத்தவும் வேண்டியதில்லை.

பொதுவாக ராஜாஜி தமிழ் நாட்டுக்குச் செய்துள்ள தொண்டையும் அளித்திருக்கும் பெருமையையும் ஒப்புக் கொள்கிறவர்களெல்லாம் இந்த ராஜாஜி ஜயந்தி வாரத்தில் ஒருங்கு சேர்ந்து கொண்டாடுவது சாத்திய மாகும்படி செய்வோம். சமீபகாலத்து விவாதங்களையும் மனக் கசப்புகளை யும் அடியோடு மறந்துவிட உதவி செய்வோம்.

* * *

தமிழ் நாட்டின் தவப் புதல்வரான ராஜாஜி நீடூழி வாழ்க வென்று வாழ்த்துவோம். தேசத் தாய்க்கு அவர் செய்யும் தொண்டுகள் எல்லாம் சிறந்தோங்கிப் பலன் தரட்டும் என்று பிரார்த்திப்போம்.

வாழ்க அந்தணன்!

வேதாந்த சித்தாந்த வித்தகர் போற்றும்
அன்பும் அருளும் ஆற்றலும் சேர்ந்த
வித்தைகட் கெல்லாம் வித்தையாய் விளங்கும்
காந்தியத்தின் காப்பாளன் ஆகி
சேரனும் சோழனும் பாண்டியன் சேர்ந்து
காத்து வளர்த்த கலைகளிற் சிறந்து
பாரினில் யாரினும் பரந்த நோக்குடன்
தமிழ் நாட்டு அறிவின் தனிப்பெரும் விளக்காய்
ஆய்ந்தவர் மதிப்பில் அரசு வீற்றிருக்கும்
சக்கரவர்த்தி நம் ராஜகோபால
ஆச்சாரியென்னும் அந்தணன் வாழ்க!

—நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை.

பம்பாய் மாதுங்கா
S. I. E. S. பள்ளிக்கூட கட்டட நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

மாதுங்கா, பிராமின்வாடா ரோடு
இந்தியன் ஜிம்கானா மைதானத்தில்
ஸ்பெஷலாக அமைக்கப்பட்டுள்ள
பிரும்மாண்டமான பந்தலில்

14—12—1947 ஞாயிறு மாலை 6 மணிக்கு

★

ஆஸ்தான வித்வான் மைசூர் டி. சௌடய்யா	—	பிடில்
கல்பாத்தி ராமநாதன்	—	மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன்	—	கடம்

★

டிக்கெட்டுகள் : ரூ. *100/- 50/- 25/- 10/- 5/-*



எல்லா பொருட்களும் ஏராளமாகக் கிடைத்து வந்திருந்த பண்டைய நாட்களில் வீண் செலவு செய்கிறவர்களை மன்னிக்க இடமிருந்தது. ஆனால் எதிலும் சிக்கனம் கையாள வேண்டியிருக்கும் இன்றோ ஹமாம், 501 ஸோப்புகளின் சின்னஞ் சிறு துண்டு துக்கடாக்களையும் காப்பாற்றுவது அத்தியவசிய அவசியம்.

ஹமாமும் 501 சோப்புகளும்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்




சேலம் நகரசபைத் தலைவர் — பிரபல வக்கீல்

ஸ்ரீ சி. இராஜகோபாலாச்சாரியார் பி.ஏ., பி.எல்.



மூன்று நண்பர்கள்

சேலத்தில் வக்கீல் தொழில் செய்தபோது, ஸர் டி. விஜய ராகவாச்சாரியாரும். ஸ்ரீ கே. ஜி. வேங்கடசுப்பய்யரும் ராஜாஜியின் இணைபிரியா நண்பர்களா யிருந்தனர். இந்த மும்மூர்த்திகளிலே பின்னால் நிற்கும் ஸ்ரீ வேங்கடசுப்பய்யர் காலமாகி விட்டார்.




மேலே: ராஜாஜி

உட்கார்ந்திருப்பவர்கள்: குமாரர் ஸ்ரீ ஸி. ஆர். நரசிம்மன்; மருமகன் ஸ்ரீ தேவதாஸ் காந்தி; புதல்வி ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ்



எந்த நாளிலும் "காந்தி மகானுடைய பூரண நம்பிக்கைக்கும் அன்புக்கும் உரியவர். ''ராஜாஜியின் சேவையைச் சென்னை மாகாணம் இழந்தால் பெருந் தவறு செய்ததாகும்'' என்ற மகாத்மாவின் எச்சரிக்கை சரித்திரப் பிரசித்தமானது.



ராஜாஜியும் பேரன் பேத்திகளும் (இரண்டு பெரிய வம்சங்களின் சந்ததிகள்)

நாட்டுக்கு ஒரு புதல்வர்



ரா.கி.

முதற் பாகம்

இமயத்தையும் குமரியையும் எல்லையாகக் கொண்ட இந்தியா தேசத்தில் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஏழு லட்சம் கிராமங்களில் ஒரு கிராமம் எத்தனையோ காலமாகத் தவம் செய்து வந்தது. இந்திய தேசத்தின் இணையற்ற புதல்வர் ஒருவரைத் தான் பெற்றெடுக்க வேண்டும் என்னும் கோரிக்கையை மனதிற் கொண்டு தவம் செய்தது. அதன் காரணமாகத் தன்னுடைய பெயர் விளங்க வேண்டும் என்றோ, தான் பிரபலம் அடைய வேண்டுமென்றோ அந்தக் கிராமம் ஆசைப்படவில்லை. தான் பெற்றெடுக்கும் புதல்வன் தேசத்துக்கு இணையற்ற தொண்டு செய்யும் பரோபகாரியாயிருக்க வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டது. சேலம் ஜில்லாவில் ஒசூர் என்னும் சிறு பட்டணத்துக்கு அருகில் உள்ளது அந்தக் கிராமம். பெயரும் புகழும் பிரபலமும் விரும்பாத அந்தக் கிராமத்தின் பெயரை நாமும் குறிப்பிடாமலே விட்டுவிடுவோம். விரும்பாதவர்களின் தலையிலே பெயரையும் புகழையும் கட்ட வேண்டிய அவசியம் இல்லையல்லவா?

அத்தகைய தன்னலமில்லாத கிராமத்தின் தவம் ஒருநாள் நிறைவேறியது. அந்த நன்னாள் இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் வந்தது. அன்று மேற்படி கிராமத்தில் வைஷ்ணவ வைதிக குடும்பத்தில் புனர்வசு நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் ஒரு குழந்தை பிறந்தது.

குழந்தையின் தகப்பனார் அந்த ஊரின் கிராம முனிசீப். நல்ல அறிவாளி; படிப்பாளி. குழந்தை பிறந்த நேரத்தை வைத்துக் கொண்டு ஜாதகம் கணித்தார். ஜாதகம் கணித்து அதன் பலாபலன்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கியதும் அவருக்கு ஒரே திகைப்பும் வியப்புமாய்ப் போய் விட்டது. ஆராய்ச்சியைப் பாதியிலேயே நிறுத்தி ஜாதகத்தைப் பத்திரமாகப் பெட்டியிலே வைத்துப் பூட்டினார். அதை யாரிடமும் காட்டுவதில்லை யென்றும் மனதில் திடசங்கல்பம் செய்து கொண்டார்.

சக்கரவர்த்தி ஐயங்காரின் தர்ம பத்தினி சிங்காரம்மாள் சில நாளைக் கெல்லாம், "குழந்தையின் ஜாதகம் எப்படியிருக்கிறது?" என்று கவலையுடன் கேட்டாள். ஏனெனில் குழந்தை பார்ப்பதற்குத் தாட்டியாக இல்லை; எடுப்பதற்குக் கனமாகவும் இல்லை. ஆகவே அன்னை குழந்தையின் ஆயுள் பாவத்தைப்பற்றிக் கவலைப்பட்டாள்.

தகப்பனார் சொன்னதாவது :—"ஜாதகமா? அதை ஏன் கேட்கிறாய், போ! வேறு யாரிடமும் இந்த ஜாதகத்தைக் காட்டவே கூடாது. உன் பிள்ளை அப்படிப்பட்ட வேளையில் பிறந்திருக்கிறான்!"

தாயார் மேலும் கவலை மடைந்து, "என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? ஜாதகத்தில் என்னதான் இருக்கிறது?" என்று கேட்டாள்.

"இராமனும் கிருஷ்ணனும் சங்கரரும் இராமானுஜரும் பிறந்த நேரத்தில் உன் பிள்ளை பிறந்திருக்கிறான். அவர்களுடைய ஜாதகங்களின் அம்சங்கள் எல்லாம் இந்த ஜாதகத்திலும் இருக்கின்றன. இராஜ யோகமும் இருக்கிறது; வனவாச யோகமும் இருக்கிறது. குருபீட யோகமும் இருக்கிறது; சாதிப் பிரஷ்ட யோகமும் இருக்கிறது. ஜனங்கள் 'ஓஹோ' வென்று தோத்திரமும் செய்வார்கள்; 'போ! போ!' என்று விரட்டியும் அடிப்பார்கள். சக்கரவர்த்தியின் சிம்மாசனத்திலும் இவன்

தீர்த்திருப்பான்; ஏழையிலும் ஏழையாகக் குடிசையிலும் வசிப்பான். இப்படி யிருக்கிறது குழந்தை ஜாதகத்தின் இலட்சணம்! வேற்று மனிதர்களிடம் இதைக் காட்டக் கூடாதுதானே?"

இதைக் கேட்ட குழந்தையின் தாயார் சிறிது நேரம் பிரமித்துப் போய் நின்றாள். பிறகு, "அதெல்லாம் எப்படியாவது போகட்டும்; குழந்தையின் ஆயுள்பாவம் கெட்டியாக இருக்கிறதல்லவா?" என்று சிங்காரம்மாள் கேட்டாள்.

"ஆயுள் பாவம் திவ்யமாக இருக்கிறது; எண்பது வயதுக்குக் குறைச்சல் இல்லை!" என்றார் தகப்பனார்.

"அதுதான் முக்கியமாக வேண்டியது" என்றாள் தாயார்.

பிறகு இருவருமாக யோசனை செய்து, குடிசைக்கும் அரண்மனைக்கும் பொருத்தமாயிருக்கட்டும் என்று நிர்மானித்து, "இராஜகோபாலன்" என்று குழந்தைக்குப் பெயரிட்டார்கள். அதனுடன் வம்சபரம்பரைக் குரிய பெயரும் சேர்ந்து பிற்காலத்தில் "சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்" என்று ஆயிற்று.

• • •

குழந்தையைத் தகப்பனார் முதலில் கிராமப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார். படிப்பு வெகு சீக்கிரம் வருவது கண்டு பங்களூரில் உயர்தரப் படிப்புக்கு அனுப்பினார். பி. ஏ. பரீட்சை வரையில் முடிந்தது. பள்ளிப் படிப்பில் அக்கரையாகப் பிள்ளையின் கவனம் செல்லவில்லை. முதல் மார்க் வாங்கிப் பரிசுகள் பெறவில்லை. ஆனாலும் பரீட்சை மட்டும் தேறி வந்தது.

குமாரர் இராஜகோபாலருக்கு அதிசய சக்தி ஒன்று இருந்தது. பாடபுத்தகங்களை ஒரு தடவை அல்லது இரண்டு தடவை புரட்டிப் பார்த்தால் போதும். உடனே மனதில் விஷயம் பதிந்துவிடும். பரீட்சை எழுதித் தேறுவதற்கு வேண்டிய அளவு தெரிந்து கொள்வார்.

மற்றபடி அவருடைய கவனமெல்லாம் வேறு துறைகளில் சென்றது. உலக விவகாரங்களில் மனம் அதிகம் ஈடுபட்டது.

குமாரரின் அறிவுக் கூர்மையையும் விவாதத் திறமையையும் அறிந்திருந்த தகப்பனார் அவரை வக்கீல் படிப்புக்கு அனுப்பத் தீர்மானித்தார். அந்தக் காலத்தில் வக்கீல்கள் தான் தேசத்திலேயே பிராபல்யமும் பெயரும் பணமும் அதிகமாக அடைந்து வந்தார்கள். சிலர் ஹைகோர்ட் ஜட்ஜுகளாகவும் நிர்வாக சபை அங்கத்தினர்களாகவும் ஆனார்கள். எனவே, பி.ஏ. பட்டம் பெற்றபிறகு இராஜகோபாலர் சென்னைச் சட்டக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார்.

சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது அவருடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமான சம்பவம் நடந்தது. சுவாமி விவேகானந்தர் அப்போது சென்னைக்கு விஜயம் செய்து கடற்கரையிலுள்ள 'ஐஸ் ஹவுஸ்' என்னும் கட்டிடத்தில் தங்கியிருந்தார். சுவாமி விவேகானந்தரின் பெயர் தேசமெங்கும் பிரபலமடைந்திருந்த காலம் அது. மற்றும் பல மாணவர்கள் சுவாமிஜியைத் தரிசிக்கப் போனது போல் இராஜகோபாலரும் போனார். சுவாமிகளின் உபதேச மொழிகள் மற்ற எவருடைய மனதிலும் பதிந்ததைக் காட்டிலும் அதிகமாக இராஜகோபாலரின் மனதிலே பதிந்தது. பாரத நாட்டின் பழைய மகோன்னதத்தை அறிந்தார்; இந்நாளில் அன்னியருக்கு அடிமைப்பட்டுத் தாழ்வுற்றுக் கிடப்பதை அறிந்தார். பொது நலத் தொண்டின் பெருமையையும் தியாக வாழ்க்கையின் மகிமையையும் உணர்ந்தார். ஹிந்து சமூகத்தில் காளான்களைப் போல் முளைத்திருந்த குறைபாடுகளையும் தெரிந்து கொண்டார். சுருங்கச் சொன்னால், சுவாமி விவேகானந்தர் இராஜகோபாலரின் பரம குருநாதர் ஆனார். ஆனால் குருவின் உபதேசம் சில காலம் மனதிற்குள்ளேயே கிடந்து முதிர்ச்சி யடைந்து வந்தது. தக்க சமயம் வந்ததும், அது கற்பக விருட்சத்தைப் போல் தளிர்த்து வளர்ந்தது.

• • •

சட்டப் பரீட்சையிலே தேறியதும் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் சேலத்தில் வக்கீல் தொழில் செய்ய ஆரம்பித்தார். சில காலத்துக்குள்ளேயே பிரபல வக்கீல் என்று பெயரும் புகழும் பெற்றார். பண வருவாயும் அதிகமாகிக் கொண்டு வந்தது. கிரிமினல் வழக்குகளை நடத்துவதில் முக்கியமாக அவருடைய பெயர் பிரசித்தி பெற்று வந்தது. எதிர்க் கட்சிச் சாட்சிகளைத் தம்முடைய குறுக்கு விசாரணைகளில் திணறித் திண்டாடும்படி செய்து வந்தார்.

எனவே, சேலம் ஜில்லாவில் எதாவது தப்புத் தண்டாக் காரியங்களைச் செய்ய

உத்தேசிக்கிறவர்கள் முதலிலேயே ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரை வக்கீலாக அமர்த்திக் கொண்டு அப்புறந்தான் குற்றம் செய்யப் போவார்கள் என்ற கதை வழங்கலாயிற்று!

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் ஒரு தரப்பு வக்கீலாக அமர்த்தப்பட்டால், இன்னொரு தரப்புக்கு ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியார் அமர்த்தப்படுவார்.

சேலம் ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியார் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்; அபாரமான சட்ட ஞானம் உடையவர். கோர்ட்டு-களில் அவர் செய்யும் அட்டகாசங்களைப் பார்த்தே மாஜிஸ்ட்ரேட்டுகளும் ஜட்ஜுகளும் அசந்து போவார்கள். அப்படிப்பட்ட பெரிய யானை வக்கீலை இளம்பிராயத்து இராஜகோபாலாச்சாரியார் தைரியமாக எதிர்ப்பார். திறமையாகவும் சாதுர்யமாகவும் தம் கட்சியைப் பேசி, ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரின் அட்டகாசமான வாதங்களையெல்லாம் தவிடுபொடியாக்கி விடுவார். வெகு சீக்கிரத்திலேயே ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் வாதத் திறமை மிகவும் பிரபலமாகி, கோயமுத்தூர் முதலிய வெளியூர்களுக்கும் அவரை அழைக்கத் தொடங்கினார்கள்.

ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியார் மிகவும் பெரிய மனிதர். உருவம் எப்படிப் பெரியதோ அப்படியே இருதயமும் பெரியது. எனவே, இளைஞர் இராஜகோபாலாச்சாரியார் இவ்வளவு சாமர்த்தியமுள்ளவரா யிருப்பது கண்டு சந்தோஷப்பட்டதுடன், அடிக்கடி அவரைப் பாராட்டிப் பேசி வந்தார். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் பெரியவரிடம் மிக்க மரியாதை காட்டிப் பழகி வந்தார். "இந்தப் பிள்ளையாண்டான் ரொம்பவும் முன்னுக்கு வருவான்!" என்று பெரிய ஆச்சாரியார் அடிக்கடி சொல்வதுண்டாம்.

* * *

பிரபல வக்கீலாகிப் பணம் நிறையச் சம்பாதித்ததுடன் ஸி. ஆர். திருப்தியடைந்து இருந்து விடவில்லை. பொது வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் அவர் கவனம் செலுத்தினார். பல துறைகளிலும் ஈடுபட்டார். அரசியலில் அவர் தீவிரவாதி; அதாவது திலகர் கட்சியை ஆதரித்தவர். ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை. ஸ்ரீ சுப்பிரமணிய சிவம், ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி ஆகியவர்களைத் தேடிச் சென்று கண்டுபிடித்து சிநேகம் செய்து கொண்டார். தேசத்துக்காகக் கஷ்டப் பட்டவர்களுக்கு உதவி புரிந்தார். சூரத் காங்கிரஸில் திலகர் கட்சியை ஆதரிப்பதற்காகச் சென்னையிலிருந்து சென்ற கோஷ்டியில் ஸி. ஆர். ஒருவர்.

ஸ்ரீ வ. உ. சிதம்பரனார் ஆரம்பித்த சுதேசிக் கப்பல் கம்பெனிக்குச் சேலத்தில் பங்குகள் சேர்த்துக் கொடுத்தார். சூரத் காங்கிரஸை மிதவாதிகள் தங்கள் இஷ்டப்படி நடத்த முயற்சி செய்தபோது, திலகர் கட்சியைச் சேர்ந்த தீவிர வாதிகள் அந்தக் காங்கிரஸ் நடைபெறாமல் கலைத்துவிடத் தீர்மானித்தார்கள். மேற்படி தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றுவதற்கு ஸி. ஆர். முன்னணியில் நின்று உதவினார். (இதனாலேதான் பிற்காலத்தில் பொதுக் கூட்டங்களில் ஏற்படும் கலவரங்களை ஸி. ஆர். பொருட்படுத்துவதில்லை. சூரத்தில் தாம் செய்த காரியத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டு, பொதுக் கூட்டக் கலவரங்களைச் சமாளித்து நடத்திக் கொண்டு போக முயல்வார்; பெரும்பாலும் வெற்றியும் அடைவார்.)

சூரத் காங்கிரஸ் கலைந்து போன பிறகு, மிதவாதிகள் தனியாக மகாநாடு கூடி, தீவிர வாதிகளைத் தள்ளிவிட்டுக் காங்கிரஸ் மகா சபையை நடத்த முடிவு செய்தார்கள். தீவிர வாதிகள் சேர முடியாதபடி காங்கிரஸின் சட்ட திட்டங்களையும் வகுத்தார்கள். இந்தப் புதிய மிதவாதக் காங்கிரஸுக்குச் சென்னை மாகாணத்தில் ஆதரவு தேடும் வேலையை ஸ்ரீ சீனிவாச சாஸ்திரியார் மேற்கொண்டு சுற்றுப் பிரயாணம் செய்தார். மற்ற ஊர்களிலே யெல்லாம் ஸ்ரீ சீனிவாச சாஸ்திரியார் ஓரளவு ஆதரவு திரட்ட முடிந்தது. ஆனால் சேலத்தில் மட்டும் அவருடைய ஜம்பம் ஒன்றும் சாயவில்லை. ஒரு பொதுக் கூட்டங்கூட நடத்த முடியவில்லை. இதற்குக் காரணம் ஸி. ஆர். தான் என்று ஸ்ரீ சீனிவாச சாஸ்திரியார் தெரிந்து கொண்டார். அப்போது இராஜகோபாலாச்சாரியார் விஷயத்தில் ஸ்ரீ சாஸ்திரியாருக்கு ஏற்பட்ட மரியாதை இறுதிவரையில் நீடித்திருந்தது.

* * *

அரசியல் துறையில் ஸி. ஆர். எப்படித் தீவிரவாதியோ, அப்படியே சமூக சீர்திருத்தத் துறையிலும் தீவிர வாதி. சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிகளைக் கேட்ட நாளிலிருந்தே, ஹிந்து சமூகத்தி

னுள்ள பெரிய குறைபாடு சாதி வேற்றுமையும் தீண்டாமையும் என்பதை அவர் கண்டறிந்திருந்தார். வி. ஆர். விஷயத்தில் கொள்கை என்பது ஒன்று, நடத்தை என்பது இன்னொன்று என்னும் வித்தியாசமே கிடையாது. மனது எது சரியென்று தீர்மானிக்கிறதோ, அதையே வாய் சொல்லும்; அதுவே செயலிலும் வெளியாகும். ராஜாஜி தமது வாழ்க்கை நடைமுறையில் சாதி வித்தியாசத்தையும் தீண்டாமையையும் அந்த நாளிலேயே ஒழித்து விட்டார். சமபந்தி போஜனங்கள் ஏற்படுத்தினர். சிதம்பரத்தில் நந்தனார் குலத்தில் பிறந்து சிறந்த வேதாந்தியாயும் துறவியாயும் விளங்கிய சுவாமி சகஜானந்தரை அழைத்துத் தமது இல்லத்தில் உணவருந்துவித்தார். இதெல்லாம் முப்பத்தைந்து வருஷத்துக்கு முன்னால் நடந்தது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது வேறு சாதிக்காரர் பார்த்திருக்கப் பிராமணர்கள் தண்ணீர் அருந்தவும் மாட்டார்கள். ஸ்மார்த்தப் பிராமணர்களின் வீட்டில் அய்யங்கார்கள் சாப்பிட மாட்டார்கள். கப்பலேறி இரங்கூனுக்குப் போய் வந்தவனைச் சாதிப் பிரஷ்டம் செய்து விடுவார்கள். இப்படியெல்லாம் சாதி வேற்றுமைக் கொடுமை தலைவிரித்தாடிய காலத்தில் வி. ஆர். ஹரிஜனங்களைத் தமது இல்லத்துக்கு அழைத்து வந்து சேர்ந்து உட்கார்ந்து உணவருந்தினர். அவருடன் இன்னும் சில சிநேகிதர்களும் சேர்ந்தார்கள். எனினும், வைதிகக் கூட்டத்தாரிடையே வி. ஆர். மீது வெறுப்பும் கோபமும் வளர்ந்து வந்தன. அவர் சேலம் முனிசிபல் சேர்மன் ஆனபோது செய்த சில காரியங்கள் மேற்படி வைதிகர்களின் கோபத்துக்குத் தூபம் போட்டு வளர்த்தன.

நகரசபைக் குழாய்களை அவ்வப்போது திறந்து விடுவதற்கும் மூடுவதற்கும் சில பையன்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஹரிஜனப் பையன் ஒருவனும் இருந்தான். வி. ஆர். நகரசபைத் தலைவரா யிருந்த காலத்தில் மேற்படி ஹரிஜனப் பையன் அக்கிரகாரத்துக் குழாய்களைத் திறந்து மூடுவதற்கு அமர்த்தப்பட்டான். இதை அறிந்த அக்கிரகாரத்து மகாஜனங்கள் அளவில்லாத ஆத்திரம் அடைந்து நகரசபைத் தலைவரிடம் புகார் செய்தார்கள். மேற்படி தீண்டாத வகுப்புப் பையனை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்றார்கள். "முடியாது!" என்று கண்டிப்பாகச் சொன்னார் வி. ஆர். "நகரசபை எல்லா ஜனங்களுக்கும் பொதுவானது. நகரசபை நிர்வாகத்தில் சாதி வேற்றுமையை ஸ்தாபிக்கச் சொல்கிறீர்களா? கூடவே கூடாது!" என்று சொல்லி விட்டார்.

இதே சமயத்தில் நகரசபை நிர்வாகத்திலிருந்த ஹைஸ்கூல் ஹாஸ்டலில் ஹரிஜனப் பையன் ஒருவன் வேலைக்கு அமர்த்தப்பட்டான். அவனையும் எடுத்துவிட வேண்டும் என்று கிளர்ச்சி எழுந்தது. மறுபடியும் கண்டிப்பாக "முடியாது" என்ற பதிலே வந்தது. "அதற்குச் சம்மதமில்லாத சாதி ஹிந்துப் பிள்ளைகள் ஹாஸ்டலிலிருந்து வெளியேறட்டும்" என்று வி. ஆர். சொல்லி விட்டார்.

இந்தக் காரியங்களின் பலனாக, சேலம் வைதிகப் பிராமணர்கள் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரையும் அவருடைய சிநேகிதர்கள் சிலரையும் சாதிப் பிரஷ்டம் செய்

ராஜாஜியின் தந்தை சக்கரவர்த்தி ஐயங்கார்



"தம்மிற் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது."

தார்கள். வைதிக காரியங்கள் நடக்கும் போது அவர்களுடைய வீடுகளுக்கு யாரும் போகக்கூடாதென்று கட்டுப்பாடு செய்தார்கள். இதன் பேரில் ஆச்சாரியாரும் அவருடைய சிநேகிதர்களும் தாங்களே வைதிக கர்மங்களுக்குரிய மந்திரங்களைக் கற்றுக்கொண்டு ஒருவர் வீட்டில் ஒருவர் புரோகிதம் செய்து வைத்தார்கள்.

* * *

கிராமத்தில் வாழ்ந்திருந்த ஆச்சாரியாரின் தகப்பனார் தமது புதல்வர் பிரசித்த வக்கீலாகி நிறையப் பணம் சம்பாதித்து முனிசிபல் சேர்மன் பதவி வகிப்பதில் ரொம்பவும் பெருமை கொண்டிருந்தார். ஆனால் மேற்சொன்னவாறு தமது புதல்வர் சாதி பகிஷ்காரத்துக்கு உள்ளாகி யிருக்கிறார் என்ற செய்தி அவர் மனதில் வேதனையையுண்டாக்கியது. சேலத்துக்குப் புறப்பட்டு வந்து புதல்வரிடம் மனம் விட்டுப் பேசினார். "இப்படிப்பட்ட காரியமெல்லாம் செய்யலாமா? நம்முடைய குலம் எப்பேர்ப்பட்ட பழமையான வைதிக குலம்? அதன் பெருமைக்குப் பங்கம் செய்து விட்டாயே? நாளைக்கு நான் இறந்து போனால் என்னைத் தூக்கிப்போட நாலு பேர் வரவேண்டாமா? அந்திய கர்மங்கள் செய்து வைக்க வைதிகர்கள் வரவேண்டாமா?" என்று மனங் கசந்து கேட்டார்.

அப்போது ஆச்சாரியார் தமது தந்தை கூறியிருந்த அவருடைய குலத்தின் பழைய வரலாறு ஒன்றை அவருக்கே ஞாபகப் படுத்த வேண்டியதாயிற்று.

ஆச்சாரியார் பிறந்த வம்சத்துப் பெரியோர்களில் ஒருவர் நதியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தபோது, வெள்ளத்தில் ஒரு பிரேதம் மிதந்து வந்தது. அப் பெரியவர் அதைக் கரையேற்றி வைதிக முறைப்படி சம்ஸ்காரம் செய்தார். அதற்காக ஊரார் அவரைக் கோபித்துக் கொண்டார்கள். அநாதப் பிரேத சம்ஸ்காரத்தின் மகிமையைப் பற்றிச் சாஸ்திரங்கள் கூறுவதைப் பெரியவர் எடுத்துக் காட்டினார். "அதெல்லாம் அந்தந்த சாதியைச் சேர்ந்தவர்கள் செய்ய வேண்டியது; கீழ்க்குலத்துப் பிரேதத்தை மேற்குலத்தவன் தொட்டு எடுத்து சம்ஸ்காரம் செய்யக் கூடாது" என்று சொல்லிப் பெரியவரை ஊரார் பகிஷ்காரம் செய்தார்கள்.

அந்தப் பெரியவரின் வீட்டில் தகப்பனாரின் சிராத்தம் வந்தது. ஊரார் வர மறுத்து விட்டார்கள். என்ன செய்வது என்று பெரியவர் ஏங்கிக் கொண்டிருந்தபோது அயலூரிலிருந்து ஒரு வைதிகப் பிராமணர் வந்தார். சிராத்தம் செய்து வைத்தார். எல்லாம் முடிந்து அயலூர்க்காரர் புறப்படும் சமயத்தில் ஊரார் கும்பலாக வந்தார்கள். "இந்தப் பொல்லாத மனிதனை நாங்கள் சாதியை விட்டுத் தள்ளி வைத்திருக்கிறோம். நீர் யாருக்காணும் சிராத்தம் செய்து வைக்க? எப்படிச் செய்து வைக்கலாம்?" என்று சண்டை பிடித்தார்கள். அவர்களைப் பார்த்து அசலூர்ப் பிராமணர், "ஊருக்குப் பொல்லான், எனக்கு நல்லான்!" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். சொல்லிவிட்டு, அக்கணமே மாயமாய் மறைந்தார். கிராமத்து வைதிகர்களின் கண் திறந்தது. வந்திருந்த பிராமணர் சாக்ஷாத் விஷ்ணுமூர்த்தியே என்று அறிந்தார்கள். வீட்டுப் பெரியவரின் காலில் விழுந்து "அபராதத்தை க்ஷமிக்க வேண்டும். இனிமேல் தாங்கள்தான் இந்த ஊருக்குச் சக்கரவர்த்தி!" என்றார்கள். அது முதல் அந்த வம்சத்துக்கே 'நல்லான் சக்ரவர்த்தி' என்ற பட்டப் பெயர் நிலைபெற்றது.

ராஜாஜியின் தர்மபத்தினி
ஸ்ரீ அலர்மேலு மங்கை அம்மாள்



"தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

இப்படித் தாம் படித்த பாடத்தையே தனயன் இப்போது திருப்பிப் படித்ததைக் கேட்ட தகப்பனார் பதில் சொல்ல முடியாதவரானார். "நீ சொல்வது என்னமோ உண்மைதான்; ஆனால் உலகம் ஒப்புக்கொள்ள வேண்டுமே?" என்றார். "இப்போது உலகம் ஒப்புக்கொள்ளாவிட்டால் கொஞ்ச காலத்துக்குப் பிறகு ஒப்புக்கொள்ளும்!" என்று புதல்வர் கூறிவிட்டு, ஸ்ரீ ராமானுஜர் முதலிய வைஷ்ணவ ஆச்சாரிய புருஷர்களின் வாழ்க்கைச் சம்பவங்களை எடுத்துக் காட்டினார். "என்னமோ, குழந்தாய்! நீ எப்படியாவது நன்றாயிருக்க வேண்டும்!" என்றார் தகப்பனார்.

சில காலத்துக் கெல்லாம் தந்தை பயந்தது போலவே நடந்தது. ஆச்சாரியாரின் தந்தை சேலத்தில் தம் குமாரரின் இல்லத்தில் காலமானார். அவருடைய ஈமக் கிரியைகளை நடத்திவைக்க வைதிகர்கள் வர மறுத்தார்கள். ஆச்சாரியார் தமது நண்பர்களின் உதவியைக் கொண்டே எல்லாக் கிரியைகளையும் செய்து முடித்தார்.

* * *

தந்தை காலமானதற்கு இரண்டு வருஷத்துக்கு முன்னதாகவே ஆச்சாரியாரின் அருமை மனைவி காலமாகி விட்டார்.

ஆச்சாரியாரின் இல்வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது.

அவருடைய தர்மபத்தினி எல்லாக் காரியங்களிலும் அவருக்கு உண்மையான வாழ்க்கைத் துணைவியாயிருந்தார். அவருடைய சமூக சீர்திருத்தக் காரியங்களுக்கெல்லாம் உடன்பட்டு உற்சாகமாக நடத்தி வைத்தார். ஆனால் அவருடைய உடல் நலம் பெரிதும் குன்றியிருந்தது. அடிக்கடி நோய் வாய்ப்படுவது இயல்பாகப் போயிருந்தது.

ஒரு சமயம் கணவர், மனைவி இருவரையும் ஆஸ்த்மா நோய் பிடித்திருந்தது. கணவரைக் காட்டிலும் மனைவிக்கு நோய் அதிகக் கடுமை. ஆச்சாரியார் தம்முடைய நோயைப் பொருட்படுத்தாமல் தமது மனைவிக்கு இடைவிடாமல் சிசுருஷை செய்து வந்தார். பல இரவுகள் சேர்ந்தாற்போல் கண்விழித்து மனைவியின் நோய்க் கொடுமையைத் தணிப்பதற்கு முயன்றார். இதனால் தம்முடைய உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்ததை அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

ஆச்சாரியாரை நன்கு அறியாதவர்கள் சிலர் அவர் சிறந்த அறிவாளி என்றும், ஆனால் இருதய மற்றவர் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதைப் போன்ற அநியாயமான கூற்று வேறு ஒன்றும் இல்லையென்று சொல்லலாம். ஸி. ஆர். எவ்வளவு அறிவிற் சிறந்தவரோ அவ்வளவு அதிகமான இருதய விசாலமும் தயாள குணமும் உள்ளவர் என்பதை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நன்கறிவார்கள்.

சில மனிதர்கள் தாங்கள் யாரிடமாவது அன்பு கொண்டிருந்தால் அதைப் பறையறைந்து உலகத்துக் கெல்லாம் தெரியப்படுத்துவார்கள். நாலு பேர் இருக்கும்போது, "என் கண்ணே! கண்மணியே! உனக்காகவே நான் உயிர் வாழ்கிறேன். இல்லாவிட்டால் முன்னமே இந்த உயிரை விட்டிருப்பேன்!" என்பார்கள். ஏதாவது துக்கம் நேர்ந்து விட்டாலோ மாரில் அடித்துக் கொண்டு 'லபோ லபோ' என்று கத்துவார்கள். ஒப்பாரி வைத்து அழுவார்கள். இப்படியெல்லாம் அன்பையும் சரி, துக்கத்தையும் சரி, வெளிப்படையாகக் காட்டிக் கொள்வது பண்பாடு குறைந்தவர்கள் செய்யும் காரியங்கள்.

பண்பாடு உள்ளவர்களோ தங்கள் அன்பை இருதய அந்தரங்கத்தில் அரிய பொக்கிஷத்தைப் போல் வைத்துக் கொள்வார்கள்; சமயம் நேரும்போது காரியத்தில் காட்டுவார்கள். அம்மாதிரியே எவ்வளவு பெரிய துக்கம் நேர்ந்தாலும் அதை மனதுக்குள்ளேயே வைத்துக் கொள்வார்கள். வெளிப் படையாகக் காட்டிக் கொள்ளுகிற துக்கத்தைக் காட்டிலும் உள்ளே அடக்கும் துக்கந்தான் பன்மடங்கு கொடியது; அது பொறுப்பதற்கரிய வேதனை தருவதாகும்.

ஆச்சாரியார் மிகச் சிறந்த பண்பாடு அடைந்தவர். ஆதலின் அவர் எந்த விதமான உள்ளத்து உணர்ச்சியையும் வெளிப் படையாகக் காட்டிக் கொள்ள மாட்டார். அது அவருடைய இயல்புக்கு மாறானது.

உறவினரிடம் அவர் கொண்டுள்ள பாசத்தையோ, சிநேகிதர்களிடம் கொண்டுள்ள அபிமானத்தையோ, ஏழை எளியவர்களிடம் கொண்டுள்ள தயாளத்தையோ அறிய வேண்டுமானால், அவர் செய்யும் காரியங்களிலே பார்த்து அறியவேண்டும். தம்முடைய குடும்பத்திலோ தமது நண்பர்களின் குடும்பத்திலோ யாருக்காவது நோய் வந்து படுத்தால் அவர் எவ்வளவு சிரத்தையுடன் தம்முடைய உடல் நலத்தைப் பொருட்படுத்தாமல் சிசுருஷை செய்

கிறார் என்பதைக் கவனித்துப் பார்த்தால், அவருடைய அறிவைக் காட்டிலும் இருதயமே விசாலமானது என்பது தெரியவரும்.

* * *

ஆச்சாரியாரின் அறிவுக் கூர்மையையும், இருதய நயானத்தையும் ஒருங்கே எடுத்துக் காட்டும் ஒரு சம்பவத்தைக் கேளுங்கள். அவர் சேலத்தில் பிரபல வக்கீலாயிருந்தபோது நடந்த சம்பவந்தான்.

ஒருநாள் காலையில் ஒரு படித்த பிராமணர் தமது குடும்பத்தோடு ஸி. ஆர். வீட்டுக்கு வந்தார். "நான் பாலக்காட்டு ஹைஸ்கூலில் உபாத்தியாயர். என் பெயர் ஹரிஹர அய்யர். திருப்பதிக்குக் குடும்பத்தோடு சென்றிருந்தேன். திரும்பி வரும்போது கையிலிருந்த பணம் களவு போய் விட்டது. தாங்கள்தான் உதவி செய்ய வேண்டும்!" என்றார். "சரி; பார்த்துக் கொள்வோம். இன்று சாயங்காலந்தானே இனிமேல் பாலக்காட்டுக்கு ரயில்? இங்கேயே சாப்பிட்டுவிட்டு இருங்கள். நான் கோர்ட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஸி. ஆர். வெளியே சென்றார். நேரே தந்தி ஆபீஸுக்குப் போய்ப் பாலக்காட்டுக்கு எக்ஸ்பிரஸில் தந்தி அடித்தார். "ஹரிஹர ஐயர் என்ற பெயர் கொண்ட உபாத்தியாயர் இங்கு ஒருவரும் இல்லை" என்று பதில் வந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் ஜவான்கள் இருவர் ஆச்சாரியார் வீட்டுக்குச் சென்று போலி ஹரிஹர ஐயரைக் கைது செய்து கொண்டு வந்து மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நிறுத்தினார்கள். "பொய் சொல்லி ஏமாற்றிப் பணம் பறிக்க முயன்றதாக" வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

உடனே விசாரணையும் ஆரம்பமாயிற்று. ஆச்சாரியார் சாட்சி கூறியதும், போலி ஹரிஹர அய்யர் தாம் சொன்னது பொய் தான் என்று ஒப்புக்கொண்டார்.

கோர்ட்டில் கூடியிருந்த வக்கீல்கள் முதலியோர் ஆச்சாரியாரின் அறிவுத் திறத்தை மெச்சினார்கள்.

மாஜிஸ்ட்ரேட்டும் அதே மனோபாவத்துடன், "இருநூறு ரூபாய் அபராதம்; கட்டத் தவறினால் மூன்று மாதம் கடுங் காவல்" என்று தீர்ப்புக் கூறினார்.

ஹரிஹர ஐயரைப் பின் தொடர்ந்து கோர்ட்டுக்கு வந்திருந்த அவருடைய மனைவி மக்கள் 'ஓ' வென்று புலம்பத் தொடங்கினார்கள். ஹரிஹர ஐயர் ஆச்சாரியாரைப் பார்த்து "நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்!" என்று கதறினார்.

ஆச்சாரியார் உடனே ஹரிஹர ஐயரின் வக்கீலாகி, "அபராதம் ரொம்ப அதிகம்; தயவு செய்து குறைக்க வேண்டும்!" என்றார். "சரி; குறைத்துத் தொலைக்கிறேன். ஐம்பது ரூபாய்!" என்றார் மாஜிஸ்ட்ரேட். "ஐம்பது ரூபாய்க்கு நான் எங்கே போவேன்?" என்று ஹரிஹர ஐயர் மீண்டும் அலறினார்.

"தயவு செய்து கோர்ட்டார் இன்னும் கொஞ்சம் அபராதத்தைக் குறைக்க வேண்டும்!" என்று ஸி. ஆர். கேட்டுக் கொண்டார்.

"இதென்ன தொல்லை? இதற்குக் கேஸ் கொண்டு வருவானேன்? சரி; பத்து ரூபாய்! இதோடு முடியுங்கள்!" என்றார் மாஜிஸ்ட்ரேட்.

"ரொம்ப வந்தனம்!" என்று சொல்லி விட்டு ஸி. ஆர். தமது சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் எடுத்து அபராதம் கட்டினார். ஹரிஹர ஐயரையும் அவருடைய குடும்பத்தாரையும் மறுபடியும் வீட்டுக்கு அழைத்துப் போய்ச் சாப்பாடு செய்வித்து, அவர்கள் உண்மையில் போக வேண்டிய ஊருக்கு டிக்கட்டும் வாங்கிக் கொடுத்து அனுப்பினார்!

எப்படி இருக்கிறது கதை?

* * *

ஆச்சாரியாரின் குடும்ப பாசத்தையும் இட வைராக்கியத்தையும் காட்டும் இன்னொரு சம்பவம் பின்வருமாறு:—

எவ்வளவோ வைத்திய சிகிச்சைகளும் சிசுருஷைகளும் செய்தும் பயன்படாமல் ஆச்சாரியாரின் தர்ம பத்தினி 1915-ம் ஆண்டில் காலமானார். அப்போது ஆச்சாரியாருக்கு வயது மூப்பத்தெட்டுதான். முப்பத்தெட்டு வயதில் அவ்வளவு பெரிய அந்தஸ்தில் உள்ளவருக்கு மனைவி இறந்து போனால், இரண்டாந்தாரம் மணம் செய்து வைக்க எவ்வளவோ பேர் முன் வராமல் இருப்பார்களா?

சாதாரணமாகச் சொன்னால் ஆச்சாரியார் ஒரு வேலை செட்டமாட்டார் என்று எண்ணிச் சிலசண்டர்கள் ஒரு அருமையான காரணமும் சொன்னார்கள். "தங்களுக்கோ ஐந்து குழந்தைகள். வீட்டில் வயதான ஸ்திரீ யாரும் இல்லை. ஐந்து குழந்தைகளையும் எப்படி வளர்ப்பீர்கள்? குழந்தைகளை

உற்சாகத்திற்காவது தாங்கள் மறு கலியாணம் செய்து கொள்ள வேண்டியதுதான்!" என்று போதனை செய்தார்கள். அதற்கு ஆச்சாரியார் என்ன பதில் சொன்னார் என்று தெரியுமா?

"நீங்கள் சொல்லுவது உண்மையே. ஐந்து குழந்தைகளைப் பார்த்துக்கொள்வது கஷ்டமான காரியந்தான். ஆனால் அது என் கடமை. நீங்கள் சொல்லும் யோசனை என் கடமையை இன்னும் கடினமாக வல்லவா செய்கிறது? ஐந்து குழந்தையோடு இன்னொரு ஆறாவது குழந்தையையும் பராமரிக்கும் பொறுப்பை யல்லவா என் தலையில் சுமத்தப் பார்க்கிறீர்கள்?"

இதற்குப் பதில் சொல்ல முடியாமல் நண்பர்கள் சும்மா இருந்து விட்டார்கள்.

இரண்டாம் பாகம்

டாக்டர் பெஸண்டு அம்மையார் 1916-ம் ஆண்டில் ஹோம்ரூல் இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். 1917-ம் ஆண்டில் அவ்வியக்கம் உச்ச நிலையை அடைந்தது. சென்னை மாகாணத்தில் படித்த வகுப்பார் அனைவரிடையேயும் அந்த இயக்கம் பெரும் பரபரப்பை உண்டாக்கிற்று. அந்த வருஷத்தின் மத்தியில் டாக்டர் பெஸண்டு, டாக்டர் அருண்டேல், ஸ்ரீ வாடியா ஆகிய மூவரையும சென்னை பெண்ட்லண்டு சர்க்கார் பாதுகாப்பில் வைத்தார்கள்.

மேற்படி மூவரும் சேலம் ஸ்டேஷன் வழியாகக் கூனூருக்குக் கொண்டுபோகப் பட்டார்கள். வழியில் உள்ள ஸ்டேஷன்களில் அந்த மூவரையும் பார்ப்பதற்காக ஜனங்களை அநுமதிக்கக் கூடாது என்று உத்தரவு பிறந்திருந்தது. சேலம் ஸ்டேஷனில் பிளாட்பாரத்துக்குள் நுழையும் கதவைப் பூட்டி யிருந்தார்கள். ஆச்சாரியாரும் அவருடைய சிநேகிதர்களும் எப்படியும் டாக்டர் பெஸண்டை ரயிலில் பார்த்து விடுவது என்று தீர்மானித்துக் கொண்டு வந்திருந்தார்கள். எவ்வளவோ கேட்டுப் பார்த்தும் கதவு திறக்கப் படுவதாகக் காணோம். ரயிலோ வந்துவிட்டது. அவ்வளவுதான்; ஆச்சாரியார் தமது சிநேகிதர்களுக்கு ஒரு சமிக்ஞை செய்தார். எல்லாருமாகச் சேர்ந்து கதவை ஒரு கெம்பு கெம்பினார்கள். பெயர்த்து எடுத்து அப்புறப் படுத்திவிட்டுப் பிளாட்பாரத்துக்குள் நுழைந்து விட்டார்கள். டாக்டர் பெஸண்ட் அம்மை முதலியவர்களைப் பார்த்துப் பேசித் திருப்தி அடைந்தார்கள்.

அப்புறம் மூன்று மாதம் தமிழ்நாடு முழுதும் அல்லோல கல்லோலப் பட்டது. டாக்டர் பெஸண்டை விடுதலை செய்ய வேண்டுமென்று பிரமாதமான கிளர்ச்சி நடந்தது. அக்கிளர்ச்சியில் ஆச்சாரியாரின் தலைமையில் சேலமும் முன்னால் நின்றது. கிளர்ச்சி மகத்தான வெற்றி யடைந்தது. டாக்டர் பெஸண்ட் முதலியவர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள்.

இதற்குப் பிறகு ராஜாஜியின் அரசியல் உணர்ச்சி அதிக வேகமும் தீவிரமும் அடைந்தது. அரசியலில் தொண்டு செய்வதற்குச் சேலம் தக்க இடமில்லை என்று தோன்றியது. எனவே, சேலத்தை விட்டுச் சென்னைக்குப் பிரயாணமானார். மயிலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் ரோட்டில் ஸ்ரீ எஸ். கஸ்தூரி ரங்கய்யங்காருக்குச் சொந்தமான "சபர்மதி" என்னும் பங்களாவில் குடியிருந்துகொண்டு சென்னை ஹைகோர்ட்டில் பிராக்டிஸ் ஆரம்பித்தார்.

அந்தச் சமயத்தில் டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் மீது அவர் மதுரையில் செய்த ஒரு பிரசங்கத்துக்காக இராஜத் துவேஷ வழக்குத் தொடரப் பட்டது.

டாக்டர் நாயுடுவுக்கும் ஆச்சாரியாருக்கும் ஏற்கெனவே பழக்கம் உண்டு. எனவே, நாயுடுகாருவின் வழக்குக்கு ஆச்சாரியார் வக்கீலாக முன் வந்தார். மதுரைக்குச் சென்று கீழ்க் கோர்ட்டிலேயே ஆஜராகி வழக்கை நடத்தினார்.

இராஜத் துவேஷ வழக்குத் தொடருவதற்கு மாகாண சர்க்காரின் உத்தரவு வேண்டும் என்பது சட்டம். "இந்த வழக்குக்குச் சர்க்காரின் உத்தரவு சட்ட பூர்வமான முறையில் வரவில்லை" என்று ஆச்சாரியார் பூர்வாங்க ஆட்சேபம் ஒன்று கிளப்பினார். "எல்லாம் உத்தரவு சரியான முறையிலேதான் இருக்கிறது" என்றார் சர்க்கார் கட்சி வக்கீல். "அப்படியானால் சரி; என்னுடைய ஆட்சேபத்தை மட்டும்

குறித்துக்கொண்டு மேலே வழக்கு நடத்துங்கள் !'' என்றார் ஆச்சாரியார்.

ஆட்சேபத்தைக் கீழ்க் கோர்ட்டில் அதிகமாக வற்புறுத்தாமல் விட்டது ஆச்சாரியாரின் முன் யோசனைக்கும் அறிவுக் கூர்மைக்கும் ஒரு பெரும் அத்தாட்சியாகும். அதிகமாக வற்புறுத்தியிருந்தால் உடனே தந்தி யடித்துச் சர்க்காரின் உத்தரவைச் சரியான முறையில் தருவித்துக் கொண்டிருப்பார்கள். அதற்கு இடம் கொடுக்க ஆச்சாரியார் விரும்பவில்லை. ஆனால் கீழ்க்கோர்ட்டில் எழுப்பாத ஆட்சேபத்தை அப்பீல் கோர்ட்டில் எழுப்பக் கூடாது என்பது சட்டமுறை. ஆகையால் ஆட்சேபத்தை இலேசாகக் குறிப்பிட்டு விட்டு, மேலே வழக்குக்குப் போய்விட்டார்.

இந்த முன் யோசனையின் பயனாகவே கீழ்க்கோர்ட்டில் டாக்டர் வரதராஜுலு நாயுடுவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை பிற்பாடு ஹைகோர்ட்டில் ரத்தாயிற்று.

ஹைகோர்ட்டில், அப்போது சென்னையில் மிகப் பிரசித்த வக்கீலா யிருந்த ஸ்ரீ கே. சீனிவாசய்யங்கார் டாக்டருக்காக ஆஜரானார். ஸ்ரீ கே சீனிவாசய்யங்காருக்கு ஆச்சாரியார் உதவி வக்கீலா யிருந்தார். ஆச்சாரியாரின் யோசனைப்படி ஸ்ரீ சீனிவாசய்யங்கார் ''சர்க்கார் உத்தரவு சரியான முறையில் பெறப்படவில்லை'' என்ற விஷயத்தை வற்புறுத்தி வாதம் செய்தார். வழக்கை விசாரித்த ஜஸ்டிஸ் சதாசிவய்யர் மேற்படி பூர்வாங்க ஆட்சேபத்தை ஒப்புக் கொண்டு வழக்கை விசாரியாமலே தள்ளிவிட்டார்.

ஸ்ரீ கே. சீனிவாசய்யங்கார் கோர்ட்டில் முடிவுரையாகப் பேசும்போது தமக்கு இவ் வழக்கில் உதவி செய்த ஸ்ரீ ஆச்சாரியாரின் திறமையைப் பெரிதும் பாராட்டினார். இது அந்தக் காலத்துப் பத்திரிகைகளில் பிரசுரமாகி யிருக்கிறது.

* * *

டாக்டர் பெஸண்டு அம்மையார் பாதுகாப்பிலிருந்து விடுதலை யடைந்த பிறகு வரவர அவருடைய அரசியல் கொள்கை மிதவாதப் போக்குக்கு மாறிக்கொண்டு வந்தது. டாக்டர் வரதராஜுலு நாயுடு செய்து வரும் பிரசங்கங்கள் இராஜத் துவேஷத்தைப் பரப்புகின்றன என்பதாக ஒரு உப தலையங்கம் பெஸண்டு அம்மையின் ''நியூ இந்தியா'' பத்திரிகையில் வெளியாயிற்று. இதனாலெல்லாம் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் உள்ளத்தில் ஒரு பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. அரசியல் துறையில் தென்னிந்தியாவை முதன்மை ஸ்தானத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. இதற்காகத் தென்னிந்தியாவில் தீவிர வாதிகள் அடங்கிய கோஷ்டி ஒன்றைச் சேர்க்க வேண்டுமென்று தீர்மானித்தார். அந்தக் கோஷ்டிக்குத் தாம் தலைவராக வேண்டுமென்ற எண்ணம் அவர் மனதில் அப்போது உதிக்கவில்லை. கோஷ்டி சேர்ந்து அதற்குத் தம்மாலான உதவிகளைப் பின்னாலிருந்து செய்ய வேண்டுமென்றுதான் எண்ணினார். சென்னைக்கு வந்ததிலிருந்து அவருடைய வக்கீல் வருமானம் சேலத்தைக் காட்டிலும் அதிகமாகி யிருந்தது. எப்போதுமே இரண்டு கையாலும் எடுத்துக் கொடுக்கும் பழக்கம் உடையவர். அதிலும் தேசத்துக்காகக் கஷ்டப் பட்டவர்களுக்குப் பண உதவி செய்வதில் கர்ணனாக இருந்தார்.

ஆச்சாரியாரின் மனோரதம் கூடிய சீக்கிரத்தில் நிறைவேறியது. தமிழ்நாடு முழுவதிலும் தீவிர அரசியல் வாதிகள் அடங்கிய கோஷ்டி ஒன்று திரண்டது. இந்தக் கோஷ்டியில் அப்போது பிரபலமா யிருந்தவர்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கர், சேலம் ஆதிநாராயண செட்டியார், மதுரை ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப், ஸ்ரீரங்கம் ஸ்ரீ கே. வி. ரங்கசாமி ஐயங்கார், ஆரணி சுப்பிரமணிய சாஸ்திரி முதலியவர்கள்.

சென்னையில் ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி அப்போது சிறந்த அரசியல் பிரசங்கி என்று புகழ் பெற்று வந்தார்.

1918-ம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் மாகாண மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீமதி சரோஜினி தேவி தலைமை வகித்தார். அந்த மகாநாட்டில் டாக்டர் பெஸண்டு அம்மையாரின் கோஷ்டிக்கும் மற்றத் தீவிர கோஷ்டிக்கும் போராட்டம் நடந்தது. அப்போது முதல் உலக யுத்தம் முடியும் சமயம். யுத்தத்திற்கு இந்தியர்கள் உதவி செய்ய வேண்டுமென்பது டாக்டர் பெஸண்டின் கட்சி; உதவி செய்யக் கூடாதென்பது எதிர்க் கட்சி. டாக்டர் பெஸண்டின் கட்சி தோல்வி யடைந்தது. இதற்கு முக்கிய காரணமா யிருந்தவர்கள் ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியாரும் ஸ்ரீ சத்தியமூர்த்தியும் ஆவார்கள். ஸ்ரீ சத்தியமூர்த்தி பிரசங்கப்

போர்முனையில் நின்று வெளுத்துக் கட்டினார். ஸ்ரீ ஆச்சாரியார் பின்னணியில் நின்று பெஸண்டு அம்மையைத் தோற்கடிக்க வோட்டுக்கள் சேர்த்தார். காஞ்சி மகாநாட்டோடு டாக்டர் பெஸண்டின் அரசியல் செல்வாக்கு முடிவுற்றது.

• • •

சேலம் ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியார் ஆதிகாலத்தி லிருந்து அரசியலில் தீவிர வாதி என்று பெயர் பெற்றவர். அவரைத் தலைவராகக் கொண்டு, சென்னையில் தீவிர அரசியல் கட்சியை ஸ்தாபிக்கவும், காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கைப்பற்றவும் புது அரசியல் கோஷ்டியார் எண்ணியிருந்தார்கள். இந்தச் சமயத்தில் இந்திய அரசியலில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது; ஒரு புத்தப் புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று. அதாவது தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரஹப் போராட்டத்தினால் உலகத்தின் கவனத்தையே கவர்ந்த மகாத்மா மோகன்தாஸ் கரம்சந்திர காந்தி இந்திய அரசியல் உலகில் பிரவேசம் செய்தார்.

இந்த மகத்தான சம்பவத்துக்கு முக்கிய காரணமாயிருந்தது ராவ்லட் சட்டமாகும். அதாவது ஜஸ்டிஸ் ராவ்லட் என்னும் ஆங்கிலேயரைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியார் இந்தியாவில் நடைபெறும் அரசியல் புரட்சிச் சதியாலோசனை இயக்கங்களைப் பற்றி யெல்லாம் விசாரணை செய்துவிட்டு, அத்தகைய பயங்கரப் புரட்சி இயக்கங்களை அடக்குவதற் கென்று ஒரு சட்டம் செய்யச் சிபார்சு செய்தார்கள். அந்தச் சிபார்சை ஒப்புக்கொண்டு லார்ட் செம்ஸ்போர்டின் சர்க்கார் இந்தியச் சட்ட சபையில் அடக்குமுறை மசோதா கொண்டு வந்தார்கள். அதற்கு ராவ்லட் மசோதா வென்று பெயர் வழங்கியது. அந்த மசோதா சட்டமான பிறகு ராவ்லட் சட்டம் என்று வழங்கப்பட்டது.

ராவ்லட் மசோதா நிறைவேறினால், அது இந்தியாவில் சகலவித சுதந்திர இயக்கங்களையும் அடக்கிப் போட அதிகாரவர்க்கத்துக்கு உதவியா யிருக்கும் என்று தேசத் தலைவர்கள் எல்லாரும் கருதினார்கள். மசோதாவைக் கண்டனம் செய்தார்கள்; தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதற்கு மேலே என்ன நடவடிக்கை எடுப்பது என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

அச்சமயத்திலேதான் மகாத்மா காந்தி முன்வந்து ராவ்லட் சட்டத்தை எதிர்க்க சாத்வீக மறுப்பு என்னும் சத்தியாக்கிரஹ முறையை மேற்கொள்ளும்படி ஜனங்களுக்கு வழி காட்டினார். சத்தியாக்கிரஹ இயக்கத்துக்குப் பூர்வாங்கமாக 1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6௳ இந்தியா தேசமெங்கும் ஜனங்கள் ஹர்த்தால் (அதாவது கடையடைப்பு, வேலை நிறுத்தம்) செய்ய வேண்டு மென்றும், அன்று பகலில் எல்லாரும் உண்ணாவிரதம் இருக்க வேண்டு மென்றும், மாலையில் பொதுக் கூட்டம் நடத்த வேண்டும் என்றும் கூறினார். அன்று வரையில் யாரும் கைக்கொள்ளாத இந்தப் புதிய அரசியல் கிளர்ச்சி முறை இந்திய மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தது; நாடெங்கும் ஒரு பெருங் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. இமயமலையி லிருந்து கன்னியாகுமரி வரையில் 1919 ஏப்ரல் 6௳ ஹர்த்தாலும், பொதுக் கூட்டங்களும் நடந்தன. அரசியல் உணர்ச்சி உள்ளவர்கள் அனைவரும் உபவாசம் இருந்தார்கள். சென்னைக் கடற்கரையில் லட்சக்கணக்கான ஜனங்கள் அடங்கிய மாபெரும் கூட்டம் நடந்தது. அவ்விதமே ஒவ்வொரு நகரிலும் பட்டணத்திலும் அதற்கு முன் என்றும் கண்டறியாத பெரும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அன்று பஞ்சாபில் சில இடங்களில் கலவரம் ஏற்பட்டு விட்டது. அதிகாரிகளின் அதிக்கிரமச் செயல்களே கலவரத்துக்குக் காரணம். கலவரங்கள் ஒரு வாரத்துக்கு நீடித்தன. ஓட்வியர் என்னும் அரக்கனை லெப்டினெண்ட் கவர்னராகப் பெற்றிருந்த பஞ்சாப் சர்க்கார் இராணுவச் சட்டத்தைப் பிரயோகித்தனர். அதே மாதம் 13௳ அமிருதஸரஸில் ஜாலியன்வாலாபாக் தோட்டத்தில் சட்டத்தை மீறிப் பொதுக் கூட்டம் நடந்தது. அதைக் கலைப்பதற்காக ஜெனரல் டயர் என்னும் ராட்சதன் பீரங்கி கொண்டு வந்து சுட்டான். நாலு பக்கமும் சுவர் சூழ்ந்த இடத்தில் வெளியே போவதற்குரிய ஒரே வாசற் பக்கத்தில் நின்றுகொண்டு சுட்டான். ஜனங்கள் சிதறி ஓடினார்கள். சுவர் ஏறிக் குதித்து உயிர் தப்ப முயன்றார்கள். ஆயினும் அறுநூறு பேர் அங்கேயே செத்து விழுந்தார்கள், ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தார்கள். ஹிந்துக்களின் இரத்தமும் முஸ்லிம்களின் இரத்தமும் கலந்து ஆறாக ஓடின.

இந்தப் பயங்கர சம்பவம் இந்தியாவை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. மகாத்மா

காந்தி சத்தியாக்கிரஹத்தைத் தள்ளிப் போட்டார். ஆயினும் அந்த ஏப்ரல் 6உ-யன்றே இந்தியாவின் அரசியல் தலைமையை மகாத்மா காந்தி ஏற்றுக் கொண்டு விட்டார் என்று சொல்லலாம்.

அதுமுதல் ஒவ்வொரு மாகாணத்திலும் மகாத்மாவைத் தலைவராகக் கொண்ட கோஷ்டி ஒன்று ஏற்பட்டு நாளுக்கு நாள் பெருகி வந்தது. சென்னையில் மகாத்மாவின் தலைமைக்கு ஆதரவு தேடியவர்களில் முதன்மையானவர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்தான். அவரைச் சேர்ந்தவர்கள் அனைவரும் மகாத்மாவின் தலைமையை ஒப்புக் கொண்டார்கள். காந்திஜி—ராஜாஜி அச்சு அந்த வருஷத்தில் தமிழ்நாட்டில் நன்கு ஸ்தாபனமாயிற்று.



* * *

அடுத்த 1920-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் நாலு அரசியல் கட்சிகள் அல்லது கோஷ்டிகள் தலையெடுத்தன.

“இதுவரையில் பிராமணர்களே எல்லா சர்க்கார் உத்தியோகங்களையும் பதவிகளையும் அனுபவித்து வருகிறார்கள். நாம் அவற்றைக் கைப்பற்றி அனுபவிக்க வேண்டும்” என்பதையே குறிக்கோளாகக் கொண்ட பிராமணரல்லாத பிரமுகர்கள் அடங்கிய ஜஸ்டிஸ் கட்சி.

மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், ஸ்ரீ ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், ஸ்ரீ டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் முதலியவர்கள் அடங்கிய மிதவாத அரசியல் கட்சி.

ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்கார், ஸ்ரீ ஏ. ரங்கசாமி ஐயங்கார், ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி ஆகியவர்கள் அடங்கிய தீவிர தேசியவாதக் கட்சி. இந்தக் கட்சியார் பிரிட்டிஷ் சர்க்காரோடு, எல்லா முனைகளிலும் போராடுவதில் நம்பிக்கை கொண்டவர்கள். கிராமப் பஞ்சாயத்து போர்டு முதல் சட்டசபை-மந்திரி சபை வரையில் தேர்தல் ஸ்தாபனங்களை யெல்லாம் கைப்பற்ற வேண்டுமென்பதில் தீவிரம் உடையவர்கள்.

கடைசியாக, காந்தீயத்திலும் காந்திஜி காட்டிய தியாக மார்க்கத்திலும் பூரண நம்பிக்கை கொண்டது ராஜாஜியின் கட்சி.

ஜஸ்டிஸ் கட்சியார் தனித்து நின்று காங்கிரஸையும் தேசியத்தையும் பகிரங்கமாக எதிர்த்து வேலை செய்தார்கள்.

பிந்தைய மூன்று கட்சியாரும் மேற்படி ஆண்டில் திருநெல்வேலியில் நடந்த மாகாண மகாநாட்டில் பலபரீட்சை செய்து பார்த்தார்கள். அப்போதுதான் அட்வகேட் ஜெனரல் பதவியை விட்டுவிட்டுப் பொது வாழ்வில் ஈடுபட்டிருந்த ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்கார் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி தமது வாக்கு வன்மையை யெல்லாம் காட்டி மிதவாதிகளை வெளுத்துக் கட்டினார். அவருக்கு மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் பதில் அளிக்கையில் கூறியதாவது:—
“ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் பாதம் பட்ட பூமியின் தூளியை நான் சிரமேற்கொள்ளத் தயாராயிருக்கிறேன். ஏனெனில், அவர் வாயினால் என்ன சொல்கிறாரோ, அதைச் செய்கையிலும் செய்து காட்டுகிறார். மற்றவர்கள் ‘ஆஹா ஊஹூ’ என்று தடபுடலாகப் பேசுவதெல்லாம் வெறும் தொண்டைச் சேதந்தான்! நாங்கள் சொல்வதற்கும் அவர்கள் சொல்வதற்கும் காரியாம்சத்தில் வித்தியாசம் ஒன்றுமில்லை!”

இப்படி மகாகனம் சாஸ்திரியார், ஆச்சாரியாரைப் பற்றிப் பரவசமாகப் புகழ்ந்து பேசியதற்கு ஒரு முக்கிய காரணமிருந்தது. திருநெல்வேலி மகாநாட்டுக்குச் சில தினங்களுக்கு முன்புதான் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்திருந்தார். பஞ்சாப் அதிக்கிரமங்களையும் கிலாபத் அநீதியையும் காரணங்களாகக் கொண்டு, அவற்றுக்குப் பரிகாரம் தேடுவதற்காக மகாத்மா மேற்படி இயக்கத்தை ஆரம்பித்தார். (பின்னால், நாகபுரி காங்கிரஸில், இந்திய சுயராஜ்ய இலட்சியம்

ஒத்துழையாமை இயக்கத்தின் பிரதான காரணமாகச் சேர்க்கப்பட்டது.)

ஒத்துழையாமை இயக்கம் என்பது, படிப்படியாக இந்திய மக்கள் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைப்பதை நிறுத்தி, சர்க்காரை அடியோடு ஸ்தம்பிக்கச்செய்வது தான். இந்த இயக்கத்தை அஹிம்சா தர்ம அடிப்படையின் பேரில் நடத்த மகாத்மா திட்டம் போட்டார். இயக்கத்தின் ஆரம்ப காரியங்களாக மூவகைப் பகிஷ்காரத்தை வகுத்தார். அப்போது புதிதாக அமுலுக்கு வரவிருந்த மாண்டேகு - செம்ஸ்போர்டு அரசியல் திட்டத்தின்படி ஏற்படும் சட்ட சபைத் தேர்தல்களைப் பகிஷ்கரிப்பது முதல் பகிஷ்காரம். கோர்ட்டுகளை வக்கீல்கள் பகிஷ்கரிப்பது இரண்டாவது பகிஷ்காரம். மாணுக்கர்கள் சர்க்கார் ஆதிக்கத்துக்குட்பட்ட பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறுவது மூன்றாவது பகிஷ்காரம்.

மேற்படி திட்டத்தை மகாத்மா காந்தி வெளியிட்டவுடனே, ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அதை ஒப்புக்கொண்டு வக்கீல் தொழிலைத் தாம் விட்டுவிட்டதாக அறிவித்தார். ஆயிரக் கணக்காக வருவாய் வந்துகொண்டிருந்த தொழிலைக் கொள்கையின் நிமித்தம் ஒரு நொடியில் கைவிட்ட தியாகச் செயல் மகாகனம் சாஸ்திரியின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்திருந்தது. இந்தியா தேசத்திலேயே மகாத்மா காந்தியின் ஒத்துழையாமைத் திட்டத்தை ஒப்புக்கொண்டு முதன் முதலாகத் தொழிலை விட்ட பெரிய வக்கீல்கள் ஐந்தாறு பேரில் ஸ்ரீ ஆச்சாரியார் ஒருவர். சென்னை மாகாணத்தில் இந்தத் தியாகம் செய்த முதல் வக்கீல் இவர்தான். இவரைப் பின்பற்றிப் பிற்பாடு சுமார் நூறு வக்கீல்கள் சென்னை மாகாணத்தில் வக்கீல் தொழிலை விட்டுத் தேசத்தொண்டில் இறங்கினார்கள்.

• • •


திருநெல்வேலி மகாநாட்டிலும் ஆச்சாரியார் முன்னணியில் வந்து நிற்கவில்லை. எந்தக் காரியமாகட்டும், எந்த நிலைமையாகட்டும், தான் என்று அட்சதையைத் தலையில் போட்டுக்கொண்டு முன்னால் வந்து நிற்கும் சுபாவம் அவரிடம் கிடையவே கிடையாது. காரியத்திலேதான் குறியே தவிரப் புகழும் பிராபல்யமும் அடையும் எண்ணம் சிறிதும் அவரிடம் இல்லை.

இந்த நாட்களிலேதான் ஒரு சமயம் மகாத்மா காந்தி தமது அஹிம்சாதர்ம ஒத்துழையாமை இயக்கத்தைப் பிரசாரம் செய்வதற்காகச் சென்னைக்கு விஜயம் செய்தார். சென்னையில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் விருந்தினராக அவருடைய வீட்டிலே தங்கினார். ஆயினும் தம்மை வரவேற்ற வீட்டுக்காரர் யார் என்பதே மகாத்மாவுக்குத் தெரியாமலிருந்தது. மகாத்மாவைப் பார்க்க வருவோரும் போவோருமாக வீட்டில் எப்போது பார்த்தாலும் ஒரே கூட்டம். ஆச்சாரியார் பின்னணியிலேயே இருந்து மகாத்மா கோஷ்டிக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பதில் ஈடுபட்டிருந்தார். அவரை முதன் முதலில் இன்னார் என்று கண்டு பிடித்தவர் ஸ்ரீ மகாதேவ தேசாய். அவர் மகாத்மாவிடம், "இந்த வீட்டின் சொந்தக்காரர் யார் என்பதை நீங்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே? அவர் பெயர் ராஜகோபாலாச்சாரியார். ஸி. ஆர். என்று சுருக்கப் பெயர். ஒத்துழையாமை இயக்கத்துக்காக வக்கீல் வேலையை விட்டவர். சிறந்த அறிவாளியாகத் தோன்றுகிறார். தாங்கள் அவரை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

பிற்பாடுதான் மகாத்மா காந்தி ஆச்சாரியாரைக் கூப்பிட்டு அவருடன் பேசிப் பழக்கம் செய்து கொண்டார்.

ஒருநாள் மாகாணத்திலுள்ள பிரபல அரசியல் வாதிகள் மகாத்மாவைப் பேட்டி காண்பதற்கும் அவருடைய புதிய சத்தியாக்கிரகப் போர் முறையைப் பற்றிச் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கும் வந்தார்கள். ராஜாஜியின் இல்லத்தில் இந்தப் பிரமுகர்களின் கூட்டம் நடந்தது. கேள்விகளுக்குச் சில சமயம் காந்தி மகாத்மா பதில் சொன்னார். சில கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் ராஜாஜியே பதில் சொல்லிவிட்டார். அந்தப் பதில்களுக்கு மகாத்மா ஒப்பம் வைத்தார். வயது முதிர்ந்த தேசத்தலைவரான ஸ்ரீ ஸி. விஜயராகவாச்சாரியார் இதைப் பார்த்துவிட்டு, "மகாத்மாஜி! சத்தியாக்கிரஹ தத்துவங்களைப் பற்றி ஏதாவது புத்தகம் தாங்கள் எழுதியிருக்கிறீர்களா? ஸி. ஆர். அந்தப் புத்தகத்தைப் படித்திருப்பார் போலத் தோன்றுகிறதே!" என்றார்.

மகாத்மா, 'புத்தகம் ஒன்றும் நான் எழுதவில்லை. ஆனால் உங்கள் ஸி.ஆர். எப்படியோ என்னுடைய வழிகளையும் தத்துவங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். அது எனக்கே வியப்பாகத்தான் இருக்கிறது!" என்றார். (தொடரும்)



*சுசீலா:
தங்கப்பதுமை அவள்.
என்னே காம்பீரியம்!

என்னே *அவளது எழில்!
அவள் பாண்ட்ஸ்
உபயோகிக்கிறாள்!

உலகெங்குமே புகைப்படக்காரர்களும் சித்திரகாரர்களும் ஒளிந்து கிடக்கும் தங்களுடைய எழிலை பிரகாசமாகச் சோபிக்கச் செய்ய புதுமுறைகள் கண்டு பிடித்தனர்.
... சரும சௌந்தரியமே இலட்சணமளித்த தேகாங்கங்களின் எழிலை எடுத்துக் காட்டுவது. பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமிலுள்ள இயற்கைத் தைலங்களின் உதவியால் உங்கள் சருமத்தை மிருதுவாகவும் மழமழப்பாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.



பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: தினசரி இரண்டு வேளை விரல் நுனியினால் கோல்ட் க்ரீம் மெதுவாகத் தடவி, முகத்தை செம்மையாக சுத்தம் செய்யுங்கள். பாண்ட்ஸ் டிஷ்யூவால் துடைத்து விடவும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: பின்பு வானிஷிங் க்ரீம் தடவுங்கள். அது சருமத்தில் நிறுவ மறைகிறது—சருமத்திற்கு பாதுகாப்பளிக்கிறது.

பாண்ட்ஸ் பௌடர்: பிறகு வேண்டுமானால் கொஞ்சம் பௌடரும் தடவிக் கொள்ளுங்கள். முகம் பூத்ததுபோன்ற பேரழகு காந்தியுடன் விளங்கும்.

வியாபார விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ. (இந்தியா) லிட்.
பம்பாய்-கல்கத்தா-கராச்சி-சென்னை.



பௌர்ணமி விருந்து

பி. எஸ். மணி

அன்று சிங்க ராஜாவின் அரண்மனையில் எல்லா மிருகங்களும் கூடியிருந்தன. சிங்க ராஜகுமாரனின் பிறந்த தினத்தைப் பௌர்ணமியன்று கொண்டாடவே அந்தக் கூட்டம் கூடியிருந்தது.

குரங்குகள் "தேங்காய் மாங்காய்களுக்கு நீங்கள் கவலைப்பட வேண்டாம்; அந்தப் பொறுப்பு எங்களைச் சேர்ந்தது!" என்றன.

"நான் என்ன கொண்டு வரலாம்?" என்று கேட்டது ஒட்டகம்.

"நீதான் பாலைவன சஞ்சாரியாயிற்றே! பேரீச்சம் பழம் கொண்டு வாயேன்!" என்றது கரடி.

வண்டுகள் "தேனை இப்பொழுதே கொண்டு வந்து அண்டாக்களில் சேர்த்து விடலாமா?" என்று கேட்டன.

"விருந்துக்குப் பிறகு, கான மழை பொழிய நான் இருக்கிறேன்!" என்று முன்வந்தது கர்த்தபம்.

"பாட்டுக்கு ஏற்றாற்போல் நடனமாட நான் இருக்கிறேன். ஆனால் மழை வர வேண்டுமே!" என்றது மயில்.

"மழை வந்தால் விருந்து நடப்பது கெட்டுப் போகும். மழையும் வர வேண்டாம், நீ ஆடவும் வேண்டாம்!" என்று கோபத்தோடு கூறியது முள்ளம் பன்றி.

"நான் 'கா, கா' வென்று விருந்தினர்களை வரவேற்கட்டுமா?" என்றது காக்கை.

நரி கர்வத்துடன் விருந்துக்குக் கோழிகள் கொண்டு வருவதாகக் கூறிவிட்டு, உடனே புறப்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் அது ஒரு கிராமத்தை அடைந்தது. அங்கே ஒரு குப்பை மேட்டில் பல கோழிக் குஞ்சுகள் தங்கள் தாயுடன் தானியங்களைப் பொறுக்கித் தின்று கொண்டிருந்தன. யாராவது மனிதர்கள் வருகிறார்களா வென்று நரி ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தது. ஒரு மனிதனையும் காணவில்லை. பிறகு, அது மெதுவாகக் கோழிக் குஞ்சுகளின் அருகில் சென்று, "உங்களுக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன்" என்றது.

"என்ன சேதி?" என்று எல்லாக் கோழிக் குஞ்சுகளும் ஏக காலத்தில் சேர்ந்தாற் போல் ஆவலுடன் கேட்டன.

"நாளைக்கு மிருகங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சமாதான மகாநாடு கூட்டப் போகின்றன. எல்லா மிருகங்களும் ஒன்றுக்கொன்று நட்பாயிருக்க வேண்டுமென்பதற்காகவே அந்தக் கூட்டம். இது தவிர ஒரு



பெரிய விருந்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா மிருகங்களுக்கும் அழைப்பும் போயிருக்கிறது. அந்த விருந்துக்காக உங்களை அழைத்துப் போக நான் வந்திருக்கிறேன்" என்று நரி கூறியது.

பெரிய விருந்து என்றதும் கோழிக் குஞ்சுகளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. 'நான் முதல், நீ முதல்' என்று ஒவ்வொன்றும் முண்டியடித்துக் கொண்டு வந்து நின்றன.

தாயார்க் கோழிக்கு மட்டும் எப்படியோ நரியின் தந்திரம் தெரிந்துவிட்டது. ஆகவே, அது எல்லாத் திசைகளையும் பார்த்துவிட்டுப் பிறகு ஒரு திசையை நோக்கி, "ஐயையோ! இரண்டு நாய்கள் அதோ ஓடி வருகின்றனவே!" என்று அலறிற்று.


இதைக் கேட்டதும் 'தப்பினோம், பிழைத்தோம்!' என்று நரி ஓடுவதற்கு எத்தனித்தது.

"என்னவோ எல்லா மிருகங்களும் சமாதானமாக நட்புடன் வாழவேண்டும் என்று சொல்லிவிட்டு, நாய்கள் என்றதும் ஓடுகிறீரே!" என்று கோழி கேட்டது.

"ஆமாம்; ஆனால் இந்த நாய்களுக்கு அந்தச் செய்தி இன்னும் தெரிந்திருக்காது!" என்று கூறிவிட்டு நரி எடுத்தது ஓட்டம்.

பிறகு தாயார்க் கோழி நரியின் தந்திரத்தைத் தன் குஞ்சுகளிடம் கூறியது. தங்களைக் காப்பாற்றிய தாய்க் கோழிக்குக் குஞ்சுகள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டன.

கனவு காண்பது யார்?



ராஜாஜியின் உவமைகள்

[ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமய்யர் தொகுத்தவை.]

பட்டுக் குடை பார்ப்பதற்கு மிக அழகாயிருக்கும். ஆனால் அது மழைக்கும் வெய்யிலுக்கும் பயன்படாது. அதுபோல் சிலர் காங்கிரசுக்கு எதிராகச் சொல்லும் வாதங்கள் கேட்பதற்கு அழகாயிருக்கலாம்; காரியத்திற்கு உதவாது.

★

வண்டி மாட்டை அதட்டி ஓட்டினால், சில சமயம் அது கட்டுக்கு அடங்காமல் ஓடி நம்மைப் பள்ளத்தில் தள்ளிவிடும். அதைப்போலவே போலீசைப் பயமுறுத்தி நடத்தினால், அது விபரீதமாக நடந்து சர்க்கார் என்ற வண்டியைக் கவிழ்த்து விடலாம். ஆகவே பக்குவமாக நடத்திப் பழக்க வேண்டும்.

★

புதுத் துணியிலும், அதன் சாயத்திலும் ஜனங்களுக்குப் புது மோகம் ஏற்படுவதுபோல், புதுக் கட்சிகளையும் புதுப் பேச்சுக்களையும் பார்க்கும்போது மோகம் உண்டாவது இயற்கை. புதுத் துணியில் சாயம் போய்விட்டதும் ஆசை தீர்ந்துவிடும். அதுபோல் உண்மை வெளியானதும் ஆசை நிராசையாகி விடும்.

★

கோயிலுக்கு நியமிக்கப்பட்ட தர்மகர்த்தா, கோயில் பணத்தையும் அதிகாரத்தையும் தன்னுடையதென்று நினைப்பது பாவம்; சட்டத்திற்கு விரோதம்; கடவுள் தண்டனையும் கிடைக்கும். அதேபோல் சர்க்காரின் பணத்தையும் அதிகாரத்தையும் நிர்வகிக்கும் ஜனப் பிரதிநிதிகள், அவற்றைத் தங்களுக்குச் சொந்தமென நினைப்பது மகா பாவம். ஜனங்களின் தண்டனை பொல்லாதது.

★

வண்டி இழுத்துப் பழகிய மாடுகள், பாரமான வண்டியை இழுப்பதற்கும் தானாகவே கழுத்தை வலியக் கொடுப்பதைக் காண்கிறோம். அதுபோலத்தான் தேச சேவையில் பழகியவர்களும் கஷ்டமான காரியங்களை வலிய மேற்கொள்ளுகிறார்கள்.

★

தலைக்குக் குல்லா பிடிக்கவில்லையென்பதற்காகத் தலையை வெட்ட முடியாது; குல்லாவைத்தான் மாற்றிக் கொள்ள வேண்டும். அதுபோல் சட்டத்திலுள்ள குற்றங்களுக்காக ஜனங்களைத் தண்டிக்கக் கூடாது; ஜனங்களின் வாழ்க்கைக்கு ஏற்றபடி அந்தச் சட்டத்தையும் தர்மத்தையும் மாற்றியமைக்க வேண்டும்.

★

தித்திப்புப் பட்சணங்களைச் சாப்பிடும்போது சிறிது காரமும் சேர்த்துக் கொண்டால்தான் அதிகமான தித்திப்புப் பட்சணங்களைச் சாப்பிட முடியும். அதுபோல் ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தோடு சிறிது கஷ்டத்தையும் அனுபவித்தால்தான் அதிகமான சந்தோஷத்தை அடைய முடியும்.

★

பழக்கப்பட்ட மாடுகள் இரவில் தங்கள் வழியே போய்க் கொண்டிருக்கும். எஜமானன் தூங்கினாலும் அவை தன் வழியே சென்று கொண்டிருக்கும். அதுபோலப் பொதுமக்கள் தலைவர்கள் காட்டிய வழியில் தாங்களாகவே சென்று கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அடிக்கடி வந்து வழிகாட்டிக் கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

★

தகப்பனார் சொத்தில் நல்ல பிள்ளை, கஷ்டப்பட்ட பிள்ளை, சோம்பேறிப் பிள்ளை எல்லோருமே பங்கு கேட்பதுபோல், காங்கிரஸ் முயன்று பெற்ற அதிகாரத்தில் எல்லாக் கட்சியாரும் பங்கு கேட்கின்றனர். இதை மறுப்பது எப்படி?



இதோ நொடியில் நிவாரணம்!
ஜாக்கிரதையாகவும் நிச்சயமாகவும் குணமாக்கும்
ஜலதோஷத்தை அகற்றவும், ப்ளூவை ஒழிக்கவும், வலி அல்லது ஜுரமுள்ள நிலைமைகளில் நிவாரணம் பெறவும் நீங்கள் செய்ய வேண்டியது இது தான். இரண்டு 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை நீரிது ஜலத்துடன் அல்லது சூடான பானத்துடன் உட்கொள்ளவும். உங்களை குணமாக்க 'ஆஸ்ப்ரோ' சடுதியில் வேலை செய்கின்றது. உடனேயே சமனமும் குணமும் தெரிகின்றது. நிவாரணம் சீக்கிரமானது -- அற்புதமானது. முதுகு வலி, தலை வலி, உடம்பிலும் மூட்டுகளிலும் வலி நீங்குகின்றது. உஷ்ணமும், ஜலதோஷமும், ஜுரத்தின் சின்னங்களான நடுக்கமும், துடிதுடிப்பும் அகன்று, சாந்தமும் சௌகரியமுமான உணர்ச்சி நிலவுகின்றது. இப்படி தனித்தனி வழிகளில் 'ஆஸ்ப்ரோ' உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் உதவி புரிகின்றது.
இரண்டு 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை சிறிது ஜலத்துடன சாப்பிடவும்
ASPRO
MADE IN ENGLAND
ஆகையால் ஏன் வலியுடனும் ஜுரத்துடனும் கஷ்டப்படுகிறீர்?
உங்களை குணமாக்க 'ஆஸ்ப்ரோ' இருக்கும்போது ஏன் அவஸ்தைப்படுகிறீர்?
ASPRO REG. TRADE MARK
'ஆஸ்ப்ரோ' செய்வது என்ன
விலை:
3 வில்லைகள் அணா 1. 6 வில்லைகள் அணா 2
30 வில்லைகள் அணா 10
எங்கும் கிடைக்கும்
68TH



ஏ, துண்டே! இத்தனை காலம் உன்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருந்த விஷயங்களை இன்று உன்னிடம் சொல்லுகிறேன், கேள்:

நான் பல கடைகளில் தேடியும் என் மனதிற்கு ஏற்ற துண்டு கிடைக்காமையால், கடைசியாக ஆறுமுகஞ் செட்டியார் ஜவுளிக் கடையில் நுழைந்தேன். பல துண்டுகளைப் புரட்டும்பொழுது, அடியில் பதுங்கியிருந்த நீ, என் கண்ணில் பட்டாய். உன் அழகு என்னை அப்படியே மயக்கி விட்டது.

நீ அதிக நீளமும் இல்லை; அகலமும் இல்லை. நீளத்திற்குத் தகுந்த அகலம், உடலுக்கேற்ற கறுப்புக் கரை. அது உன் விழிபோல் இருந்தது. அவைகளால் என்னைப் பார்ப்பது போலவும் இருந்தது. உடனே செட்டியார் கேட்ட பணத்தைக் கொடுத்து உன்னை யடைந்தேன். நமக்குள் ஏற்பட்ட சிநேகம் இவ்வளவு அவ்வளவு அல்ல. உன்னைத் தோளில் போட்டுக் கொண்டதுமே எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை என்ன வென்பேன்?

இவ்விதம் உன்னிடம் நான் அன்பாக இருப்பதை அறிந்து, அதற்குப் பிரதியாக நீயும் எனக்கு உதவிசெய்ய நினைத்திருந்தது அப்பொழுது எனக்குத் தெரியாது.

உனக்கு நினைவிருக்கும் என்று எண்ணுகிறேன். ஒரு நாள் குழாயடியில் உன்னைத் துவைத்து மாடிக் கொடியில் உலர்த்தி விட்டு வந்தேன். ஆபீஸிலிருந்து மாலை வந்ததும் உன்னைக் காணவில்லை. நீ அவ்வாறு அஞ்ஞாத வாசம் செய்ய வேண்டிய காரணமும் எனக்குப் புலப்படவில்லை. அதுவும் என்னிடம் எவ்வளவோ பிரியமாக இருந்த நீ, என்னை விட்டுப் பிரிந்தது மிகவும் வருத்தத்தை அளித்தது. ஆனாலும் இந்த விஷயத்தை நான் யாரிடமும் சொல்லவில்லை.

• • •

அடுத்த வீட்டில் குடியிருக்கும் வீரராகவ அய்யங்காரின் செல்வப் புதல்வி புஷ்பாவை நீ பார்த்திருப்பாய். அவள் ஓர் அழகு ராணி என்று மட்டும்தான் எனக்குச் சொல்லத் தெரியும். நான் ஒரு கவிஞனாக மட்டும் இருந்திருந்தால் அவள் அழகைப் பற்றி ஆயிரம் பாடல்களாவது பாடியிருப்பேன். அவளைக் கண்டது முதல் என் உள்ளம் ஒரு நிலையில் இல்லாது ஊசலாடிக் கொண்டிருந்தது. அவள் அடுத்த வீட்டிற்குக் குடி வந்ததே எனது பாக்கியம் என்றுகூட நான் எண்ணிக் கொண்டேன். வெகு நாளாக அவளுடன் எப்படியாவது சம்பாஷிக்க வேண்டுமென்ற ஆசையும் எனக்கு உண்டு.

அவளும் என்னுடைய நிலையில்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து, எப்படியும் இதைத் தீர ஆராய்ந்து விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டேன். எங்கள் இரண்டு வீட்டிற்கும் ஒரே மாடி. எங்கள் வீட்டிற்கு மேலாக ஒரு மாடி அறை. அதைப் போலவே என் மாடி யறைக்கு எதிராக அவர்கள் வீட்டு மாடி யறை. இடையில் அகலமான மொட்டை மாடி. நான் அநேகமாக எனது படிப்பு, எழுத்து, ஆபீஸ் காரியம், தூக்கம் எல்லாவற்றையும் மாடி யறையில்தான் வைத்துக் கொண்டிருக்கிறேன். அவள் அடுத்த வீட்டுக்கு வருவதற்கு முன் களை யிழந்திருந்த என் மாடி யறை, இப்போது கவர்ச்சியுடன் விளங்கியது. கீழே கிடந்த இரண்டு சோபா, ஒரு மேஜை, பெஞ்சு எல்லா

வற்றையும் மாடியில் குடி யேற்றினேன். மேஜையின்மீது அழகிய நிலைக் கண்ணாடி ஒன்று எப்பொழுதும் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது. முன்னெல்லாம் படிப்பதற்காக விரித்த படுக்கை விரித்தது விரித்தபடியே கிடக்கும். இப்போது அது தூங்கும் நேரம் தவிர, சுருட்டப்பட்டு பெஞ்சியின் ஓரத்தில் கிடந்தது.

இதுபோலவே அவள் வீட்டு மாடி யறையும் நாளுக்கு நாள் புதுமை பெற்றுக் கொண்டு வந்தது. உடைந்த டப்பாக்களும் கட்டில் கால்களும் அங்கே வைக்கப்பட்டுப் பல்லியும் சிலந்தியும் குடியிருந்து வந்த மாடி யறை, இப்பொழுது எல்லாம் மறைந்து புஷ்பாவின் அழகிய கொலு மண்டபமாக விளங்கியது.

என் மாடி யறையின் சர்வாதிகாரமும் என்னுடையதுதான். என் அநுமதியின்றி யாரும் உள்ளே வரமாட்டார்கள். இருந்தாலும் 'அநுமதியின்றி உள்ளே யாரும் பிரவேசிக்கக் கூடாது' என்று எழுதி, நான் என் அறையின் முகப்புச் சுவரில் ஒட்டி வைத்தேன்.

அவளும் மறுநாள் என்னைப் பின்பற்றி அழகிய வர்ணக் காகிதங்களில், 'நல்வரவு' என்று எழுதி, தன் அறையின் வாயிலில் ஒட்டி வைத்தாள். அதைக் கண்டு நான் திடுக்கிட்டேன். இதன் பயனாக ஒருவரோடு ஒருவர் பேசாமலேயே ஒருவர் மனதை ஒருவர் ஆராயத் தலைப்பட்டோம்.

சில சமயங்களில் நான் மாடி யறையில் உட்கார்ந்து ஆபீஸ் கட்டுகளைப் பிரித்து வைத்துக் கொண்டு கணக்கு போட்டுக் கொண்டிருப்பேன். அவளும் எனக்கு எதிர்த்தாற் போலுள்ள ஜன்னலில் உட்கார்ந்து, தன் அழகிய கூந்தலை அவிழ்த்து விட்டுக் கொண்டு என்னைப் பாராதது போல் தலை வாரிக் கொண்டிருப்பாள்.

அவளைப் பார்த்துக் கொண்டு நான் போடும் கணக்குகள் எப்படி யிருக்கும்? கூட்டவேண்டிய இடத்தில் பெருக்கி யிருப்பேன்; பெருக்க வேண்டிய இடத்தில் வகுத்திருப்பேன். ஒரு நாள் இப்படிப்பட்ட கணக்குக் கட்டை மானேஜரிடம் கொடுத்து விட்டு நான் வாங்கிய ஆசீர்வாதங்கள் கணக்கி லடங்கா. நான் தயாரித்த சம்பளப் பட்டியலில், மானேஜர் சம்பளம் ஐந்நூற்றைம்பதுக்கு ஐம்பது ரூபாயும், பியூன் நாகலிங்கத்தின் சம்பளம் இருபத்தைந்துக்கு இருநூற்றைம்பதும் இருப்பதைக் கண்டால் எந்த அதிகாரிக்குத்தான் கோபம் வராமலிருக்கும்? இவ்வளவிற்கும் அந்தப் புஷ்பாதான் காரணம். எனக்கு வந்த ஆத்திரத்தில் அவளை வாயார மனமாரச் சபித்தேன். அவளைச் சிருஷ்டி செய்த பிரம்மாவையும் சபித்தேன். இனிமேல் மாடி யறையில் உட்கார்ந்து ஒரு காரியமும் செய்வதில்லை என்றும், அவள் முகத்தைக்கூட எட்டிப் பார்ப்பதில்லை என்றும் சபதம் செய்து கொண்டேன்.

" இந்தக் காலத்தில் நீயும் காணமற் போய் விட்டது என் மனதிற்கு மிகவும் துன்பமளித்தது. வேறு துண்டுகள் போட்டுக் கொண்டு வெளியில் போவதைவிடத் துண்டு இல்லாமல் போவதே மேல் என்று வெறும் சட்டையுடன் வெளியே போய் வந்தேன். இப்பொழுதெல்லாம் மாடியில் சிறிது நேரம் தங்கினாலும், முன்மாதிரி எதிர் மாடியைப் பார்த்தபடி மேஜையும் நாற்காலியும் இல்லாமலிருக்க, அவற்றைத் திருப்பிச் சுவரைப் பார்த்தபடி போட்டுக் கொண்டேன். ஏனென்றால், அவளது பார்வையும்



புன்சிரிப்பும், நீண்ட கூந்தலும் என் கண்ணில் படக்கூடாது என்பதற்காகத்தான்!

கொந்தளித்த என் மனதிற்கு இப்பொழுது கொஞ்சம் சாந்தி ஏற்பட்டது. அப்படியும் அந்தக் கன்னி என்னைச் சும்மா விடவில்லை. அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை வந்த தினசரிப் பத்திரிகையைக் கையில் பிரித்து வைத்துக் கொண்டு, "அப்பாடா!" என்று இரண்டு கால்களையும் மேஜையின்மீது போட்டுக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டே படிக்க ஆரம்பித்தேன். அவ்வளவுதான்; என் எதிரில் அவளும் ஒரு பத்திரிகையை வைத்துக் கொண்டு, படிக்காமல் என்னைப் பார்த்துக் குறும்புச் சிரிப்பு சிரிக்க ஆரம்பித்தாள். எனக்கு வந்த கோபத்தில் அவள் கன்னத்தில் இரண்டு அறை அறைந்தாலென்ன என்று தோன்றியது. ஆனால் என்மேல் உள்ள குற்றத்திற்கு அவளை அடித்து என்ன பயன்? இவ்வளவு தூரம் செய்த நான், மேஜைமீதுள்ள நிலைக் கண்ணாடியை எடுத்து மூலையில் போடாதது என் தவறுதானே?

ஆத்திரத்துடன் எழுந்தேன். தூக்க முடியாமல் தூக்கி அந்த நிலைக் கண்ணாடியை மூலையில் வைத்து விட்டு, மறுபடியும் படிக்க உட்கார்ந்தேன். 'களுக்'கென்று சிரிப்பொலி கேட்டு ஜன்னல் வழியாகப் பின்புறம் பார்த்தேன். எதிர் மாடி ஜன்னலில் ஒரு காலை மடித்து ஊன்றி உட்கார்ந்து கொண்டு என்னைப் பார்த்தவள் போல் கையிலுள்ள பத்திரிகையைப் புரட்டத் தொடங்கினாள் அவள். எனக்குக் கோபம் ஒரு புறம்; வெட்கம் ஒரு புறம். 'படால்' என்று ஜன்னலை மூடி விட்டுக் கீழே இறங்கினேன்.

* * *

அப்புறம் மூன்று நாட்கள் மாடிப் புறமே நான் போகவில்லை. அன்று வெள்ளிக்கிழமை. மாலை ஏழரை மணி இருக்கும். ஆபீஸிலிருந்து வந்ததும் சட்டை முதலியவற்றைக் கழற்றி மாட்டி விட்டு, 'லைப்ரரி'யிலிருந்து வாங்கி வந்திருந்த மனோதத்துவ சாஸ்திர நூல் ஒன்றைப் பிரித்து வைத்துக் கொண்டேன். எனக்கு என்னவோ இப்பொழுதெல்லாம் மனோதத்துவ ஆராய்ச்சியில் மனது ஈடு பட்டு விட்டது!

அப்பொழுது எங்கிருந்தோ வந்த நறுமணம் என் மூக்கைத் துளைத்தது. திடுக்கிட்டுத் திரும்பினேன். தலையில் பெரிய புஷ்பச் சுமையுடன் புஷ்பா நின்று கொண்டிருந்தாள்.



"என்ன வேணும் உனக்கு?" என்றேன் அலட்சியமாக.

"ஒரு விஷயம் உங்களிடம் சொல்லணும்; உள்ளே வரலாமோ?" என்றாள்.

"தாராளமாக வரலாமே!" என்றேன் நான்.

"இல்லை ...... 'உத்தரவின்றி உள்ளே பிரவேசிக்கக்கூடாது' என்று இங்கே எழுதியிருக்கே, அதற்காகக் கேட்டேன்!" என்றாள்.

"விதி என்றால் விலக்கும் உண்டு அல்லவா?" என்றேன்.

"விதியும் விலக்கும் அந்தந்த

மனுஷ்யாளைப் பொறுத்தது போலிருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே குதூகலையுடன் உள்ளே வந்தவள், எனக்குச் சிறிது தூரத்தில் நின்றாள். உடனே பின்புறம் தன் கையில் பிடித்துக் கொண்டிருந்த ஒரு துண்டை என் மேஜைமீது வைத்து விட்டு, "இந்தாருங்கள், உங்கள் மேல் துண்டு! போன புதன்கிழமை என் பட்டுப் புடவையை உங்கள் கொடியில் உலரப் போட்டிருந்தேன். நீங்களும் அந்தக் கொடியில் இந்தத் துண்டை உலரப்போட்டிருந்தீர்கள் போலிருக்கிறது. என் புடவை காற்றில் பறந்துபோய் உங்கள் துண்டின் மேல் விழுந்து அதை மூடி விட்டிருக்கும் என்று நினைக்கிறேன். அதைக் கவனியாமல் என் அம்மா அப்படியே எடுத்துக் கொண்டு வந்து வைத்து விட்டாள்!'' என்றாள்.

"அதனாலென்ன, பரவாயில்லை!'' என்றேன்.

அத்துடன் அவள் நிற்கவில்லை. "அன்று சாயங்காலம் நீங்கள் மாடிக்கு வந்தால் உங்களிடம் அதைக் கொடுத்து விடலாம் என்று நினைத்தேன். ஆனால் இரண்டு மூன்று நாளாக நீங்கள் மாடிக்கு வரவேயில்லை. ஆதலால் இன்று கொண்டு வந்தேன்'' என்றாள்.

இந்தக் குறும்புக்காரியிடம் இவ்வளவு பணிவை நான் எதிர்பார்க்கவில்லை. ஆகவே என்ன சொல்வதென்று புரியாமல், என் துண்டாகிய உன்னை எடுத்தேன். அப்பொழுது உன்னிடமிருந்து கிளம்பிய வாசனை என்னை இனம் தெரியாத இன்பத்தில் ஆழ்த்தியது. 'ஏ, போக்கிரித் துண்டே! நீ என்னைவிட அதிர்ஷ்டசாலி!' என்று சொல்லிக் கொண்டே உன்னை மடித்து டிராயரில் வைத்துப் பூட்டிவிட்டுத் திரும்பினேன். அவளைக் காணவில்லை!

• • •

ஒரு வாரமாயிற்று. அன்று சனிக்கிழமை. எண்ணெய் தேய்த்துக் கொண்டேன். சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குப் புறப்பட நாழியாகிவிட்டது. மாடிக்குப் போய் அவசர அவசரமாகக் கட்டுகளைக் கட்டிக் கொண்டு, டிராயரை மூடிவிட்டுத் திரும்பினேன். அப்பொழுது நீ கொடியில் ஆனந்தமாகக் காற்றில் ஆடிக் கொண்டிருந்தாய். வெய்யிலில் முறிந்து விடுவாயே என்று எண்ணி, அவசர அவசரமாக உன்னை எடுத்து அப்படியே மேஜைமீது சுருட்டி வைத்து விட்டு, ஆபீசுக்குப் போய்விட்டேன்.

அன்றிரவு சாப்பாடானதும் மாடிக்கு வந்தேன். மேஜைமீது நீ கிடந்த காட்சி என் உள்ளத்தை உருக்கியது. உடனே உன்னை மடித்து வைக்க எண்ணி, கையில் எடுத்து உதறினேன். உன்னிடமிருந்து ஏதோ ஒன்று கீழே விழுந்தது. ஆச்சரியத்துடன் அதைக் கையில் எடுத்தேன். பச்சை நிற ஸில்க் ஜாக்கெட்! 'ஒருவேளை இது அந்தக் குறும்புக்காரியின் வேலையாக இருக்குமோ!' என்று எண்ணினேன். பிறகு, அது உன் வேலையாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. நீ காற்றில் மிதந்து போவதுபோல் சென்று, அந்த ஜாக்கெட்டை மூடிக் கொண்டிருக்க வேண்டும். அதை அறியாத நான் அவசரத்தில் உன்னுடன் சேர்த்து எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன்.

நீ இப்படிச் செய்ததின் மூலம் ஒரு பெரிய பிரச்னையை உண்டுபண்ணி விட்டாய். இதற்காக நான் அவளுடைய வீட்டுக்குப் போகவேண்டி வரும். தப்பிப் போனாலும் இதை இரண்டு பேர் முன்பு கொண்டுபோய்க் கொடுக்க முடியுமா? அம்மாவிடம்தான் கொடுத்தனுப்ப முடியுமா? அல்லது கொடுக்காமல் வைத்துக் கொள்ளத்தான் முடியுமா? ஒன்றும் முடியாது. ஆதலால், அவள் என் வரவை எதிர்பார்த்திருந்தது போல, நானும் அவளது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அன்று நான் ஆபீஸிலிருந்து வந்ததும், சட்டைப் பித்தானைக் கழற்றி இரண்டு கைகளாலும் சட்டையைப் பிடித்துக் கொண்டே எதிர் மாடிப் பக்கம் கண்களை ஓட்டினேன். நானா ஓட்டினேன்? அவைகளே ஓடின! அப்பொழுதுதான் முகம் அலம்பிக் கொண்டுவந்த அவள், ஒரு துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டே கண்ணாடியின் முன் நின்று தன் மூக்குத் திருகை மாற்றி மாற்றித் தேய்த்துக் கொண்டிருந்தாள். நான் ஒரு கனைப்புக் கனைத்தேன்.

பாம்பு படமெடுப்பது போலச் சட்டென்று தலையைத் தூக்கினாள். எதிரில் நான் நிற்பதைப் பார்த்ததும் "வாங்கோ, என்ன வேண்டும்?'' என்றாள்.

"உள்ளே வரலாமோ?'' என்றேன்.

"மேலே பாருங்கள்!'' என்று சொல்லி, அங்கே "நல்வரவு'' என்று எழுதியிருப்பதை எனக்குச் சுட்டிக் காட்டினாள்.

"நேற்று இங்கே ஒரு துண்டு உலர்த்தியிருந்தேன்......" என்று ஆரம்பித்தேன்.

அதற்குள், "நேற்று யாரும் இங்கே துண்டு கொண்டுவரவில்லையே!" என்றான் அவன்.

"என் துண்டு எங்கும் போகவில்லை; என்னிடம்தான் இருக்கிறது. ஆனால் அதை எடுத்து வைக்கும்போது அத்துடன் ஒரு பச்சை சில்க் ஜாக்கெட்டையும் எடுத்து வைத்து விட்டார்கள்!" என்று யாரோ எடுத்து வைத்தமாதிரி நான் ஒரு புளுகு புளுகினேன்.

உடனே, "ஆமாம், ஆமாம்! அது என்னுடையதுதான்! நேற்று இரவு பார்க்கும்பொழுது காணவில்லை. உங்களிடம் அதைக் கேட்க மனம் துணியவில்லையாதலால் கேட்கவில்லை" என்றான்.


"இதோ, அது என் மேஜைமீது இருக்கிறது; எடுத்துக் கொள்ளலாம்" என்றேன். அவனும் வந்து உடனே அதை எடுத்துக்கொண்டு போய் விட்டான்.

* * *

ஏ, துண்டே! அன்று என்னை அந்தத் தர்ம சங்கடமான நிலைமைக்கு நீ கொண்டு வந்து விட்டபடியால், நான் உன்னைப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டேன். அப்புறம் நடந்தவைதான் உனக்கு முக்கியமாகத் தெரியப்படுத்த வேண்டியவை. நீ ஜாக்கெட்டைக் கொண்டுவந்த மறுவாரம்—கிழமை ஞாபகம் இல்லை. ஒரு நாள் என் மாடிப்படி அருகில் யாரோ வந்து நின்று கொண்டு, 'ஸார்! ஸார்!" என்று கூப்பிட்டது என் காதில் விழுந்தது.

"யார் அது? புதிய குரலாக இருக்கிறதே!" என்று எட்டிப் பார்த்தேன். அடுத்த வீட்டுக்காரர் அங்கே நின்று கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டேன். ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "வாங்கோ, மேலே!" என்றேன். அவரும் வந்து ஈஸிசேரில் உட்கார்ந்தார். நான் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். அவரே பேச்சைத் தொடங்கினார்.

"நானும் உங்கள் தகப்பனாரும் கிளாஸ் மேட். நாங்கள் பிரிந்து வெகு நாட்களாகி விட்டதால் ஒருவருக்கொருவர் விவரம் தெரியாமலிருந்தது. நம்ப சம்ஸாரமும் உங்க தாயாரும் அடிக்கடி பழகி வரவேதான் இந்த விஷயம் எனக்குத் தெரிந்தது......" என்றார்.



"உன் கணவர் காது செவிடாயிருப்பதற்கு ஒன்றும் வைத்தியம் செய்து கொள்ளவில்லையா?"

'நானும் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறேன், அப்புறம் ஆகட்டும் என்கிறார்."

"ஏன்?"

"வீட்டுக் குழந்தைகளின் ஆர்மோனியப் பாடங்கள் முடிந்த பிறகு தான் வைத்தியம் செய்து கொள்ளப் போகிறாராம்!"

'இந்த அஸ்திவாரம் எதற்கோ!' என்று எண்ணி மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்தேன். இடையில் "உங்கள் தகப்பனார் எங்கிருக்கிறார்?" என்று கேட்டார்.

"அவர் நிலங்களைக் கவனித்துக் கொண்டு கிராமத்திலேயே இருந்து வருகிறார். எப்பொழுதாவது வந்து போவார். நாளைக்குகூட வருவதாகக் கடிதம் வந்திருக்கிறது!" என்றேன்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். ஒரு விஷயம். எனக்குப் பங்கஜான்னு ஒரு பெண் இருக்கிறாள். நீங்ககூடப் பார்த்திருக்கலாம்."

"ஊம்......ஊம்."

"எஸ். எஸ். எல். ஸி. வரை வாசித்திருக்கிறாள்; நன்றாகப் பிடில் வாசிப்பாள்; பாடுவாள்; அழகாகவும் இருப்பாள். அவள் கல்யாண விஷயமாக உங்கள் தாயாருடன் கலந்தாலோசித்ததில் தாயாருக்குப் பூரண சம்மதம். உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் நல்லது. ஆத்துக்கு வாங்களேன்!" என்று அன்புடன் அழைத்தார்.

அவ்வளவுதான்; கதையை வளர்த்துவானேன்? அதே ஆனியில் ஒரு நல்ல முகூர்த்தத்தில் எனக்கும் சௌபாக்கியவதி பங்கஜாவுக்கும் விவாகம் நடைபெற்றது.

ஏ, துண்டே! இப்பொழுதுதான் உனக்குப் பெட்டியிலிருந்து விடுதலை அளிக்கிறேன். ஏன் தெரியுமா? உன்னை வெகு மதிப்பளிப்பதற்காகத்தான்! 'யாருக்கு?' என்று உனக்குத் தெரியாதா, என்ன?



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த்
மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

முப்பத்து நான்காம் அத்தியாயம்

'அப்ரூவர்' ஆகிறான்!

போலீஸ் ஸ்டேஷனில் உள்ள ஆபீஸ் அறையொன்றில், ஒரு மேஜைக்கெதிரே நான்கு அதிகாரிகள் உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் போலீஸ் சூபரின்டெண்டெண்டு; அவர் ஆங்கிலேயர்; மிகவும் நேராக் பேர்வழி; பால் வடியும் வதனம்; விசாலமான நீல நிறக் கண்கள். அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் டிபுடி சூபரின்டெண்டெண்டு; அவர் சீக்கியர்; சிரித்த முகம்; துரு துரு வென்றிருக்கும் கண்கள்; கட்டுமஸ்தான உடல்; 'கரு கரு' வென்று வளர்ந்திருக்கும் தலை மயிரையும் தாடி மயிரையும் அவர் வெட்டி விடவில்லை. கைகளைக் கறுப்பு நிறக் காப்புகள் அலங்கரித்தன. பார்ப்பதற்குத் தருமத்தில் பற்றுள்ளவர் போலத் தோற்றமளித்தார். எனினும் 'சிகரெட்டுக்குத் தோஷமில்லை' என்று எண்ணும் கும்பலைச் சேர்ந்தவர். ஏனெனில் அவருடைய கையில் புகைந்து கொண்டிருக்கும் சிகரெட் துண்டு ஒன்று இருந்தது. மேஜையின் மற்றொரு புறத்தில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர். நல்ல ஆஜானுபாகு; வாலிப முறுக்கு அவரிடம் மிளிர்ந்து கொண்டிருந்தது. வார்த்தைகளை யோசித்து எண்ணிப் பேசுபவர். அவருடைய நீண்ட கிளி மூக்கும், மேடிட்ட நெற்றியும் அவர் ஓர் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சுட்டிக் காட்டின. ஸப் இன்ஸ்பெக்டருக்கு நாற்பது வயதிருக்கும். மாநிறம்; சோழியைப் போன்ற விழிகள்; உப்பிய கன்னங்கள்; கட்டைக் குட்டையான தேகம். அவர் மேலதிகாரிகளுக்கெதிரே மிகவும் பயபக்தியுடன் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

டிபுடி சூபரின்டெண்டெண்டு சிகரெட்டை உறிஞ்சிக் கொண்டே "வெளிச் சாட்சிகளை நம்பினால் நம் காரியம் ஆகாது. இந்த ஆட்களுக்குள்ளேயே யாராவது ஒருவனைப் பிடித்து 'அப்ரூவர்' ஆக்கிவிட வேண்டும். அதை விட்டால் வேறு வழியில்லை!" என்றார்.

சூபரின்டெண்டெண்டும் தலையை அசைத்து, "எஸ்! நோ ஆல்டர் நேடிவ்" (ஆம், வேறு வழியேயில்லைதான்!) என்றார்.

ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் சூபரின்டெண்டைப் பார்த்துக் கொண்டே, "நாங்கள் எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் செய்து பார்த்து விட்டோம், ஸார்! இல்லாத ஆசைகளெல்லாம் கூடக் காட்டிப் பார்த்து விட்டோம். ஆனால் எவனும் வழிக்கு வர மாட்டேன் என்கிறான்கள்!" என்றார்.

"வெளியாட்களைக் கூட மிரட்டிப் பார்த்தோம், ஸார்! யாருமே மசியவில்லை!" என்று ஸப் இன்ஸ்பெக்டர், ஸர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு ஒத்துப் பாடினார்.

“அந்த மார்வாடியைப் பிடிப்பதுதானே? அவனுடைய அப்பனைக் கூப்பிட்டு, அதட்டி மிரட்டிப் பார்த்தீர்களானால், அந்தப் பயல் ஒரு வேளை வழிக்கு வந்தாலும் வருவான்” என்று ஆலோசனை சொன்னார் டிபுடி.

“அதெல்லாம் முன்னாலேயே செய்து பார்த்து விட்டோம். பிள்ளையின் கால்களில் விழுந்து கெஞ்சாத தோஷமாகக் கெஞ்சிக்கூடப் பார்த்துவிட்டான், அப்பன்! ஆனால் பிள்ளை ஒரே யடியாக ‘முடியாது’ என்று சாதித்துவிட்டான், ஸார்!” என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

சிறிது நேரம் நால்வரும் மௌனமாக ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். கடைசியில் டிபுடி அவநம்பிக்கை தொனிக்கும் குரலில், “இந்தக் கேஸில் போய் மாட்டிக் கொண்டது சுத்த அசட்டுத் தனம். இதை நம்மால் எங்கே வெற்றிகரமாக நடத்த முடியப்போகிறது? கடைசியில் கெட்ட பெயர் கிட்டப் போவதுதான் கை கண்ட பலன்!” என்று சலித்துக் கொண்டார்.

“இன்னும் ஒரு வாரம் ‘டயம்’ கொடுங்கள், ஸார்! ஏதாவது புலன் விசாரித்துப் பார்க்கிறேன்” என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

ஸப் இன்ஸ்பெக்டரின் யோசனையை ஆமோதித்து விட்டுச் சிறிது நேரத்துக் கெல்லாம் மூவரும் எழுந்து புறப்பட்டு விட்டனர்.

ஸப் இன்ஸ்பெக்டர் ஹூக்காவைப் பக்கத்தில் இழுத்து வைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தார். சிறிது நேரத்துக் கெல்லாம் ஒரு கான்ஸ்டேபிள் உள்ளே நுழைந்து ஸலாம் வைத்தான்.

யோசனை கலைந்த ஸப் இன்ஸ்பெக்டர், “என்ன விசேஷம்?” என்று கேட்டார்.

“ஓர் ஆளைச் சந்தேகத்தின் பேரில் பிடித்து வந்திருக்கிறோம். அலகாபாத் சொந்த ஊராம்; பெயர் ரமாநாத்தாம். கேட்டதற்கு முதலில், ஊரையும் பெயரையும் மாற்றிச் சொல்லி விட்டான். அவன் அடுத்த தெரு மூலையிலே இருக்கும் தேவீதீன் வீட்டில் தங்கியிருக்கிறானாம். நீங்கள் கொஞ்சம் அதட்டி உருட்டிப் பார்த்தால், ஒரு வேளை விஷயம் வெளிப்படலாம்” என்றான் கான்ஸ்டேபிள்.

“தேவீதீனா? அவனுடைய இரண்டு பிள்ளைகளும்......”

“ஆமாம், ஸார்! அவனேதான்!”

“சரி, அந்த ஆளை அழைத்து வா!”

சிறிது நேரத்துக் கெல்லாம், கான்ஸ்டேபிள் ரமாநாத்தை ஸப் இன்ஸ்பெக்டரின் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தினான். அவர் அவனை ஒரு முறை உள்ளங்காலிலிருந்து உச்சந் தலைவரை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு அவர் ஒரு நிர்மானத்துக்கு வந்தவராய், “இவன்தானா அந்த ரமாநாத் என்பவன்! அலகாபாத்துதானே சொந்த ஊர்?...... நல்ல ஆள் அப்பா, நீ! எங்கள் கண்களிலேயே துரும்பைப் போட்டு ஆட்டி விட்டாயே! ஆமாம், இந்த ஊரில் எத்தனை நாட்களாக இருக்கிறாய?” என்று கேட்டார். அவருடைய குரல் கடுமையாயிருந்தது.

“உண்மையை ஒளிக்காமல் சொல்லப்பா! இல்லாவிட்டால் உன்னிடம் ரொம்பக் கடுமையாக நடந்து கொள்ள வேண்டி வரும்!” என்று பக்கத்திலிருந்த கான்ஸ்டேபிள், ரமாநாத்துக்குப் புத்திமதி சொன்னான்.

ரமாநாத் முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொள்ள முயன்றவாறே, “உரலில் தலையைக் கொடுத்தபின் உலக்கைக்குப் பயந்து முடியுமா? உங்கள் கையிலே நான் மாட்டிக் கொண்டாகி விட்டது! நீங்கள் கருணையுடன்தான் நடந்து கொள்ளுங்கள், அல்லது கடுமையுடன்தான் நடந்து கொள்ளுங்கள் — அனுபவிக்கவேண்டியதை நான் அனுபவித்துத்தானே தீரவேண்டும்? நான் அலகாபாத் முனிஸிபாலிடியில் வேலை பார்த்து வந்தேன். என் முட்டாள் தனமோ போதாத காலமோ, ஏது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்! நான் கக்கப் பணத்தில் கொஞ்சம் கையாடி விட்டேன். குறிப்பிட்ட கெடுவில் என்னால் அந்தப் பணத்தைக் கட்ட முடியவில்லை. வீட்டாரிடம் சொல்லியிருந்தால் இந்தக் கஷ்டங்களெல்லாம் அனுபவிக்க நேர்ந்திராது. சங்கோசத்தினால் நான் யாரிடமும் சொல்லவில்லை. கடைசியில் ஒருநாள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஊரை விட்டு ஓடி வந்து விடும்படியாகிவிட்டது. நான் சொல்லுவதில் ஒரு எழுத்துக்கூடப் பொய்யில்லை!” என்றான்.

ஸப் இன்ஸ்பெக்டர் மறுபடியும் முகத்தில் கடுமையை வரவழைத்துக் கொண்டு, “அப்படியா சேதி? ஏது, நீ பெரிய கைகார ஆளாயிருப்பாய் போலிருக்கிறதே! குடிப் பழக்கம்-கிடிப் பழக்கம் ஏதாவது உண்டோ?” என்று கேட்டார்.

"சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் அதையெல்லாம் கண்ணால் கூடப் பார்த்ததில்லை."

கான்ஸ்டேபின் ரகசியத்தைப் புரிந்து கொண்டுவிட்டவன் போலக் கண்களைச் சிமிட்டிக் கொண்டு, "வைப்பாட்டி வைத்திருப்பார்!" என்றான்.

ரமாநாத் சிரித்துக் கொண்டே, "என்னைப் போன்ற கோவணாண்டிகளுக்கு அங்கே போக்கிடம் ஏது?" என்றான்.

"அப்படியானால் சூதாடிப் பணத்தைத் தோற்றாயா? அல்லது பெண்டாட்டிக்கு நகைகள் செய்து போட்டாயா? சொல்லித் தொலையேன், அப்பா!" என்று அதட்டினார் ஸப் இன்ஸ்பெக்டர்.

அதைக் கேட்டதும் ரமாநாத் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தவாறே தலை கவிழ்ந்தான்.

"அதற்காகத்தான் நாங்களும் உங்களைப் போன்றவர்களுக்கு நல்ல இரும்புக் காப்பாகச் செய்து வைத்திருக்கிறோம். போட்டுக் கொண்டு உன் நகையாசையைத் தீர்த்துக் கொள்!" என்றார் ஸப் இன்ஸ்பெக்டர், ஏளனமாக.

இதே சமயம் தேவீதீன் முகத்தில் கலவரம் தொனிக்க அங்கே வந்து நின்றான்.

"உனக்கு இங்கே என்ன அப்பா, வேலை?" என்று அவனைப் பார்த்து அதட்டினார், ஸப் இன்ஸ்பெக்டர்.

"எசமானைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். இவர் ரொம்ப நல்ல பிள்ளைங்க, எசமான்! இவரை விட்டு விடுங்கள்!" என்று கெஞ்சினான் தேவீதீன்.

"காலிப் பயலே! குற்றவாளிக்கு வீட்டில் தங்குவதற்கு இடம் கொடுத்தது மட்டுமல்லாமல், சிபாரிசு வேறு செய்ய வந்து விட்டாயா?"

"கால் காசுக்கு பிரயோசனமில்லாத நான் என்ன சிபாரிசு செய்ய முடியும் எசமான்! நீங்கள்தான் பெரிய மனது வைத்து......"

"இவன் சர்க்கார் பணத்தை மோசடி செய்து எடுத்துக் கொண்டு ஓடி வந்தவன். இவன் மேல் வாரண்டு வேறு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது, தெரியுமா?"

"இருக்கலாம், எசமான்! மனுசனுக்குத் தப்புத் தவறு ஏற்படுவது சகஜம்தானே! இளங் கன்று பயமறியாது. ஏதோ தவறிச் செய்து விட்டார். இனிமேல் அப்படியெல்லாம் செய்யமாட்டார். இந்தத் தடவை மட்டும் பெரிய மனது வைத்து, நீங்கள்......" என்று சொல்லியவாறே தேவீதீன் ஐம்பது ரூபாயை மடியிலிருந்து எடுத்து மேஜைமீது வைத்தான்.

இதைப் பார்த்ததும் ஸப் இன்ஸ்பெக்டருக்கு 'ரௌத்ராகாரம்' பிறந்தது. "இது என்ன இது?" என்று தேவீதீன் மீது சீறி விழுந்தார்.

"ஒன்றுமில்லை எசமான்! எசமானுக்கு வெற்றிலைப் பாக்குக்காக......!" என்று தேவீதீன் இழுத்தான்.

"லஞ்சம் கொடுத்து எசமானை ஏமாற்றப் பார்க்கிறாயா? லஞ்சம் கொடுக்க வந்த குற்றத்துக்காக உன்னையும் சிறையில் அடைத்து விடுவேன். ஜாக்கிரதை! என்னை என்னவென்று எண்ணிவிட்டாய்?"

"அடைத்து விடுங்கள், எசமான்! அது தான் ரொம்ப நல்லது. 'நான் செத்தால் விராட்டி வாங்க வேண்டுமே!' என்ற இழவு கவலைப்படாமலிருக்கலாம், பாருங்கள்!"

"உன்னுடன் நான் வெட்டிப் பேச்சு பேசத் தயாராயில்லை. இவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குச் சர்க்காரே நூறு ரூபாய் இனாம் தருவதாகச் சொல்லியிருக்கிறது. உன் பிச்சைக் காசு ஐம்பது ரூபாயை வாங்கிக் கொண்டு நான் இவனை விட முடியாது. இவனை விடவேண்டுமென்றால் மூக்கால் நோட்டு — அதாவது எழுநூற்றைம்பது ரூபாய் கொண்டு வந்து வை! இஷ்டமில்லாவிட்டால் இங்கிருந்து நடையைக் கட்டு!"

"எசமான், உங்களுக்குப் பணத்துக்குப் பஞ்சமா? நானோ ஏழை; நான் அவ்வளவு பணத்துக்கு எங்கே போவேன்? ஏழை மீது இரங்கி இவரை விட்டுவிடுங்கள், எசமான்! நான் சாகுமளவும் உங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு பிழைப்பேன்."

"உன் விரட்டுப் பேச்சு இங்கே செல்லாது. நான் ஏழை மீது இரங்கிப் புண்ணியம் சம்பாதிப்பதற்கு ஒன்றும் இங்கே வரவில்லை."

"எசமான், ரொம்ப சிரம தசையில் இருக்கிறேன். கடை கண்ணிகளெல்லாம் ஏதோ பெயருக்குத்தான் இருக்கிறது."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. எழுநூற்றைம்பதுக்கு ஒரு தம்பிடி குறைந்தால்கூட நான் இவனை விட முடியாது."

"எசமான்......!"

"டேய், யாரப்பா அங்கே! இந்தக் கிழவனை வெளியில் கொண்டு போய்த் தள்ளு......! டேய் 153, இந்த ஆளை அந்த அறையில் போட்டுப் பூட்டி வை. ரைட்டரிடம் சொல்லி, இவனிடம் வாக்குமூலம் எழுதி வாங்கிக்கொள்ளச் சொல்லு!" என்று ஸப் இன்ஸ்பெக்டர் கடுமையுடன் உத்தரவிட்டார்.

தேவேசனுடைய உதடுகள் ஆத்திரத்தினால் துடித்தன. கண்கள் கோவைப் பழம்போலச் சிவந்தன. சிறிது நேரம் வரை அவன் யோசனையில் ஆழ்ந்து நின்றான். பிறகு, "இன்ஸ்பெக்டர் ஐயா, இரண்டு மணி நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள்!" என்றான்.

ரமாநாத் இதுவரை அங்கேயே நின்று கொண்டு, தேவேசனின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். தேவேசனுக்குத் தன்மீதுள்ள அன்பை நினைத்ததும், அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. ஆகவே அவன் அழுது கொண்டே, "அப்பா, என் தலையில் எழுதின எழுத்துப்படித்தானே எல்லாம் நடக்கும்? என் சொந்தத் தகப்பனாரே நேரில் இருந்தால்கூட, அவரால் இதைவிட வேறென்ன செய்திருக்க முடியும்? நடப்பது நடக்கட்டும், அதற்காக மனதை அலட்டிக் கொள்ளாதே! நீ செய்திருக்கும் உபகாரத்தை நான் சாகும்வரையும் மறக்கமாட்டேன்!" என்றான்.

தேவேசனும் கண்களைத் துடைத்துக் கொண்டு, "நீ ஒன்றும் கவலைப்படாதே, தம்பி! எழுநூறு ரூபாய் அற்பக் காசுக்கு இந்தத் தேவேசன் பின்வாங்குவதா? இதைவிட எத்தனையோ மடங்கு அதிகமான ரூபாய்கள் ஒரே நாள் சூதாட்டத்தில் நான் ஜயித்திருக்கிறேன்; தோற்றிருக்கிறேன். இப்பொழுதுகூட இந்த வீட்டை விற்றால் பதினாயிரம் ரூபாய் கிடைக்கும். இவற்றையெல்லாம் நான் தலையிலா சுமந்துகொண்டு போகப் போகிறேன்?... இன்ஸ்பெக்டர் ஐயா, தம்பியை இப்பொழுதே சிறைக்கு அனுப்பிவிடாதீர்கள். நான் இப்பொழுதே பணத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறேன்!" என்றான்.

பிறகு தேவேசன் வெகு வேகமாகப் போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியேறினான்.

ஸப் இன்ஸ்பெக்டர் குரலில் இனிமையை வரவழைத்துக் கொண்டு, "என்ன இருக்



தானும் கிழவன் ரொம்பத் தங்கமானவன். நீ எப்படித்தான் இவனைச் சொக்குப்பொடி போட்டு மயக்கினாயோ?" என்றார்.

"ஏழைகள் என்றாலே யாரும் இரங்குவார்கள்."

ஸப் இன்ஸ்பெக்டர் இலேசாகச் சிரித்துக் கொண்டு, "போலீஸ் இலாகா மட்டும் அதற்கு விதி விலக்கு என்பதைச் சொல்ல மறந்து விட்டாயே!...கிழவனிடம் இவ்வளவு ரூபாய் இருக்குமா என்பது சந்தேகந்தான்!" என்றார்.

"அப்படி இருந்து அவன் கொண்டு வந்தாலும், நான் அவனுக்கு அவ்வளவு பெரிய கஷ்டத்தை யுண்டு பண்ண விரும்பவில்லை, ஸார்! ஆகையால் நீங்கள் என்னைச் சிறைக்கு அனுப்பிவிடுங்கள். அது தான் ரொம்ப உத்தமம்!" என்றான் ரமாகாந்த்.

"எனக்கு ஐந்நூறுக்குப் பதிலாக எழுநூற்றைம்பது ரூபாய் கிடைக்கும் பொழுது நான் விடுவானேன்! வருவதை வரப் பற்றிக் கொள்ளுவதுதானே புத்திசாலித்தனம்!"

"இன்றைக்கில்லா விட்டால் என்றைக்காவது ஒரு நாள் நான் கல் உடைத்துத் தான் ஆக வேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கும்பொழுது, எப்பொழுது உடைத்தால் என்ன? தயவு செய்து எனக்காக இவ்வளவு செய்யுங்கள், ஸார்!" என்று கெஞ்சினான் ரமாகாந்த்.

ஸப் இன்ஸ்பெக்டர் ஏதோ மறந்து போன விஷயம் நினைவுக்கு வந்தவர்போலச் சுன் கொட்டினார். பிறகு மேஜை டிராயரை இழுத்து ஒரு தஸ்தாவேஜுக் கட்டை எடுத்துப் புரட்டிக் கிட்டிப் பார்த்தார். பிறகு மிகவும் வினயமான குரலில், "ஆமாம், நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன். அதன்படி நீ நடப்பதாயிருந்தால் தேவீநினுடைய பணத்துக்கும் கேடு இல்லை, உனக்கும் ஒரு கெடுதியும் வராது. நான் சொல்லுவதைக் கேட்கிறாயா?" என்றார்.

ரமாகாந்த் அவநம்பிக்கையுடன், "அப்படி ஒரு உபாயம் எங்கே இருக்கப் போகிறது, ஸார்? எனக்கு நம்பிக்கை யில்லை!" என்றான்.

"எதற்கும் மனமிருந்தால் வழியுண்டு. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்கிறேன். அதாவது ஒரு சின்ன வழக்கில் நீ சர்க்கார் தரப்பில் சாட்சி சொல்ல வேண்டும். என்ன, உனக்குச் சம்மதமா?"

"பொய்ச் சாட்சியா?"

"இல்லை, உண்மையானதுதான். நீ மட்டும் அதற்குச் சாட்சி சொல்லிவிட்டால், அப்புறம் உன் பாடு கொண்டாட்டந்தான். முனிசிபாலிடி உன் மீது வழக்குத் தொடர முடியாது. அது மட்டும் இல்லை, சர்க்காரே உனக்கு ஒரு வேலையும் கொடுத்துப் பாதுகாக்கும். நீ குழந்தையல்ல. உன்னுடைய நன்மை தீமைகளை நீயே யோசித்துக்கொள்ளு. முனிசிபாலிடி வழக்குத் தொடர்ந்தால் குறைந்தது ஐந்து வருஷமாவது கம்பி எண்ண வேண்டியிருக்கும். நான் உன்னைப் பலவந்தப் படுத்துவதாக எண்ணாதே! நன்றாக யோசித்துப் பதில் சொல்லு" என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

பிறகு அவர் ஒரு கொள்ளை வழக்கின் விருத்தாந்தம் அனைத்தையும் ஆதியோடந்தமாகச் சொன்னார். ரமாகாந்த் இம்மாதிரி எத்தனையோ வழக்குகளைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்திருந்தான். "ஆமாம், இந்த வழக்கில் நான் 'அப்ரூவ'ராக அல்லவா ஆக வேண்டும்போலிருக்கிறது? வழக்கில் சம்பந்தப்படாத நான், வழக்கில் சம்பந்தப்பட்டதாக அல்லவா சொல்ல வேண்டும்! அது பொய்ச் சாட்சியம் இல்லாமல் என்ன?" என்று ரமாகாந்த் கேட்டான்.

"சம்பவம் உண்மையானதுதான்! மேலும் நீங்கள் குற்றமற்றவர்களை மாட்டி விடப் போவதில்லை; குற்றவாளிகள்தான் சிறைக்குப் போகப் போகிறார்கள்! அப்படியிருக்கும் பொழுது இதை எப்படிப் பொய் என்று சொல்ல முடியும்? அந்தக் கொள்ளைக் காரர்களிடம் உள்ள பயம் காரணமாக அவ்வூர் வாசிகள் சாட்சியம் சொல்ல அஞ்சுகிறார்கள். இதைத் தவிர வேறொன்றுமில்லை. நீங்கள் ஒரு சின்னப் பொய் சொல்ல வேண்டியிருக்கும் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். அதனால் உங்களுக்கு ஒரு கெடுதியும் நேராது. நன்மையே உண்டாகும். அப்படியிருக்கும் பொழுது அந்தப் பொய்யைப் பொய்யாக எண்ணுவதே தப்பு என்பது என் அபிப்பிராயம். அப்புறம் உங்கள் இஷ்டம். வேண்டுமானால் நீங்கள் நன்றாகயோசித்துச் சாயந்திரத்துக்குள் பதில் சொல்லுங்கள், போதும்" என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

அவருடைய சொற்கள் ரமாகாந்தின் உள்ளத்தில் நன்றாகத் தைத்தன. 'செழித்த வாழ்வின் வருங்காலத்தைச் சீர்திருத்திக் கொள்ளுவதற்கு ஒரு சின்னஞ் சிறு பொய் சொல்லுவதில் என்ன தப்பு? சிறைத் தண்டனையிலிருந்தும் தப்பலாமே! இதற்கு இப்படி யெல்லாம் தயங்குவானேன்?' என்றது அவன் மனம். போலீஸார் தன் காரியம் கைகூட வேண்டும் என்றால், எதையும் செய்யத் தயங்கமாட்டார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆகவே 'முனிஸிபாலிடி தன் மீது வழக்குத் தொடராது. நல்ல வேலையும் கிடைக்கும்' என்பது ஊர்ஜிதமாகி விட்டால் சாட்சியம் சொல்லி விடுவது என்று தீர்மானித்து விட்டான். இருந்தாலும் அவனுடைய உள்ளத்தில் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் ஒரு பெரும் போர் நடந்து கொண்டிருந்தது.

“ஆமாம், நான் சாட்சி சொல்லுவதனால் 'யாராவது குற்றமற்றவர்களும் மாட்டிக் கொண்டு விட்டால் என்ன செய்வது?' என்று எனக்குப் பயமாயிருக்கிறதே!” என்று அவன் இழுத்தான்.

“'அப்படி யெல்லாம் நடக்காது' என்பதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன்.”

“நீங்கள் உங்கள் காரியம் ஆவதற்காகச் சொல்லி விடுகிறீர்கள். நாளைக்கு முனிஸிபாலிடி என் கழுத்தை நெரித்தால், நான் என்ன செய்வது?”

“முனிஸிபாலிடியால் உங்களுக்கு ஒரு கெடுதியும் நேராது. அதற்கும் நான் ஜவாப்தாரி. கிரிமினல் வழக்கில் சர்க்கார் தான் வாதி. சர்க்காரே உங்களை மன்னித்து விடுகிறதென்றால் உங்கள் மீது முனிஸிபாலிடியால் எப்படி வழக்குத் தொடர முடியும்? நீங்களே சொல்லுங்கள். உங்களை மன்னித்து விட்டதாகச் சர்க்காரிடமிருந்து எழுத்து மூலம் கடிதம் வாங்கிக் கொடுத்தால் உங்களுக்குப் போதும் அல்லவா?” என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

ரமாகாந்த் மௌனம் சாதித்தான். 'ஆள் வழிக்கு வந்து விட்டான்' என்ற நம்பிக்கையில் ஸப் இன்ஸ்பெக்டர் உடனே ஒரு காரைக் கொண்டு வரச் சொன்னார். அதில் ரமாகாந்தை ஏற்றிக் கொண்டு, அவர் டிபுடி ஸூபரிண்டெண்டைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டார்.

(தொடரும்)

காலக்ஷேபம்

அப்படியா!

முதல் ஆசாமி:—நேற்று ராத்திரி உங்களுக்கு நன்றாகத் தூக்கம் வந்ததா? இல்லை; 'சிவ சிவா' என்று படுத்திருந்தீர்களா?

இரண்டாவது ஆசாமி:—'ராம ராமா' என்று தான் படுத்திருந்தேன்.

முதல் ஆசாமி:—ஏன்?

இரண்டாவது ஆசாமி:—நான் ஸ்ரீ வைஷ்ணவன்!

★

பாதி சரி!

உபாத்தியாயர் (கணக்கைக் கரும் பலகையில் போட்டுக் காண்பித்து விட்டு):—கந்தரம், இதோ நான் கணக்கைப் போட்டிருக்கிறேன். உனக்குக் கணக்கு சரியாய் வந்திருக்கிறதா?

கந்தரம்:—பாதி சரியாய் வந்திருக்கிறது, ஸார்!

உபாத்தியாயர்:—என்னடா, பாதி சரியாய் வந்திருக்கிறது?

கந்தரம்:—ஆமாம், ஸார்! நான் போட்ட கணக்கின் விடை நாலு. நீங்கள் போட்டிருக்கும் விடை எட்டு! என் கணக்கு பாதி சரிதானே!

★

பேஷ்! பேஷ்!

தகப்பனர்:—உன்னை வேலைக்கு வைத்து விட்டு நான் 'ரிடையர்' ஆகலாம் என்று பார்க்கிறேன். நீ என்னடா என்றால் இப்படிச் சோம்பேறித்தனமாகக் காலங் கழித்துக் கொண்டிருக்கிறாயே!

மகன்:—அதற்கு என்ன அப்பா இப்பொழுது அவசரம்? இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ வேலை பார்த்து வா. அப்புறம் இரண்டு பேரும் சேர்ந்து 'ரிடையர்' ஆகி விடலாம்.

★

ரொம்ப சரி!

செட்டியார் (புதிதாக வந்திருக்கும் டிரைவரைப் பார்த்து):—ஏன் அப்பா, நீ இதற்கு முன்னால் யாரிடம் டிரைவரா யிருந்தாய்?

டிரைவர்:—ரானுவ லாரி ஓட்டிக் கொண்டிருந்தேனுங்க?

செட்டியார்:—அப்படியானால் நீ வேலைக்கு வேண்டாம்; என்னால் அடிக்கடி கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்க முடியாது!

★

அவர்கள் யார்?

டாக்டர் வீட்டுக்கு வந்த ஒருவர் (அங்கு ஒரே கூட்டமா யிருப்பதைப் பார்த்துவிட்டு):—டாக்டர், ஸார்! ரொம்பக் காரியமா யிருக்கிறாப் போலேயிருக்கு; நான் சாவகாசமாய் வந்து பார்த்துக் கொள்கிறேன். வரட்டுமா?

டாக்டர்:—சும்மா வாங்கோ, ஸார்! அவாளெல்லாம் என் ஆத்துக்காரியின் பிறந்தகத்து மனுஷான்! மருந்து சாப்பிட வரவில்லை; விருந்து சாப்பிட வந்திருக்கா!

No. 3.




ஆனால் நிச்சயமாய்
அதனுடைய விலை
இதைவிட
அதிகம்தான்?
ரூ. 3/1
கோல்டன்
பிளாட்டினம்
GOLDEN
Platignum
REGD
மூல்லர் அன்டு பிப்ஸ் (இந்தியா) லிமிடெட
15, கங்குராம செட்டித் தெரு, மதராஸ்



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI டிஸெம்பர் 14, 1947

4 அணா

அவரது முடக்கு வாதத்திற்கு வேறு நிவர்த்தியே இல்லை

ஒருமுறை க்ருஷென் சாப்பிட ஆரம்பிக்கும் வரையில்

மிக நந்நம்பிக்கை உடைய ஸ்திரீயாக பாவிக்கிறாள்

க்ருஷென் அவளுக்கு என்ன நன்மை செய்தது என்பதை நாம் அறிய வேண்டுமென்று அவள் நினைத்தாள். ஆனால் முடக்கு வாதத்தினால் அவதியுறுபவர்களுக்கும் விஷயம் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக அந்த அம்மையாரின் கடிதத்தைக் கீழே பிரசுரிக்கிறோம் :—

"க்ருஷென் எனக்கு சாதித்தது என்ன என்று நீங்கள் அறிவது அவசியமென நினைத்தேன். நான் முடக்கு வாதத்தினால் பெரிதும் கஷ்டப்பட்டவள். எவ்வளவோ செலவு செய்து எத்தனையோ வைத்தியங்கள் செய்து பார்த்தேன். உண்மையைக் கூற வேண்டுமானால்—க்ருஷென் ஒன்றேதான் எனக்கு நிவர்த்தியளித்தது. முன்பு என்றால் நகரக்கூட முடியவில்லை. ஆனால் ஒருமுறை க்ருஷென் சாப்பிட்டபின்பு—நான் முழுதும் மாறிவிட்டேன். க்ருஷென் எனக்கு அளித்த நிவர்த்தியைக் குறித்து என் நண்பர்கள் யாவருக்கும் கூறுவேன்."—(மிஸஸ்) ஏ. ஏ.

முடக்கு வாதத்திற்கு வைத்தியம் செய்யுமுன் முதலில் குடலையும் மூத்திர கோசத்தையும் சுத்தப்படுத்த வேண்டியது. மேற்படி வேலையை மிகவும் சுலபமாகவும், ஜாக்கிரதையாகவும் செய்யக் கூடிய இரண்டு சக்திகளும் ஒன்றாக க்ருஷெனில் இருக்கிறது.

அபாயகரமான அசிலங்களும் விஷங்களும் மூத்திர கோசத்தின் மூலம் அகற்றப்படுகின்றன. குடல் சரியாகவும் ஒழுங்காகவும் வேலை செய்யத் தூண்டப்படுகிறது. அதன் பலன்—முடக்கு வாத வலி அகன்று உடலில் யௌவன விறுவிறுப்பு, புத்துயிர் பெற்ற உணர்ச்சி யேற்படுகிறது. க்ருஷென் சாப்பிட இன்றே ஆரம்பியுங்கள். முதலில் சில தடவைகள் சாப்பிட்ட பிறகு உங்களுள் விசித்திரமான மாறுதல் ஏற்படுவதைக் காண்பீர்கள். எல்லா கெமிஸ்டுகளும் வியாபாரிகளும் க்ருஷென் பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1-10-0 வீதம் விற்பனை செய்கிறார்கள்.

தி இந்தியன் பாங்க்
லிமிடெட்

★

தலைமை ஆபீஸ் :

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 72,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000

ரிசர்வ் நிதி ரூ. 62,00,000

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment

